வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.10.2022 புதன்கிழமை | இதழ் : 321 | பக்கங்கள் : 16



# இனப் பிரச்னைக்கு ஒரு வருடத்தில் தீர்வு!

- ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கிறோம்
- கூட்டமைப்பு முழுமையாக ஆதரவளிக்கும்

## சுமந்திரன் எம். பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

"புதிய அரசமைப்பு ஊடாக ஒரு வருட காலத்துக்குள்ளே இனப் பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

புதிய அரசமைப்பின்

15



# பிரித்தானியா பிரதமராக ரிஷி சுனக் பதவியேற்றார்!

லண்டன், ஒக். 26

பிரித்தானியாவின் பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் நியமிக்கப்பட்டார். மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் அவருக்கு நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பிரித்தானியாவின் பிரதமராக இருந்த லிஸ் ட்ரஸ், பதவியை இராஜிநாமா செய்வதாக

15

## 16 வருட சிறையின் பின்னர்

# மூன்று அரசியல் கைதிகள் நிரபராதிகளென விடுதலை!

## கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக்ரோபர் 26

16 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நிரபராதிகளாக இனங்காணப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

15



நேற்றைய தினம் சூரிய கிரகணம் யாழ்ப்பாணத்தில் மாலை 5.41 மணிக்கு தொடங்கி சுமார் 20 செக்கன்கள் நீடித்தபோது எடுக்கப்பட்ட படம்.
எடுத்த இடம்: யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரை
படம்: செ. ராஜேந்திரா

## ஓமந்தையில் வனவள திணைக்களம்

# பயிர்செய்ய பண்படுத்திய நிலத்தில் மீள் காடாக்குவதற்காக மரநடுகை!

வவுனியா, ஒக். 26

ஓமந்தையில் பயிர்செய்கை மேற்கொள்ள தயார்படுத்தப்பட்ட மேட்டு நிலத்தில் வனவளத் திணைக்களத்தினர் மீள் காடாக்குவதற்காக மரங்களை நடுகை செய்துள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - ஓமந்தை - கொந்தக்காரன்குளத்

15

## பிரச்னைகளை சுமுகமாக தீர்க்கும் நோக்கில்

# குருந்தூர், வெடுக்குநாறி மலைக்கு விஜயதாஸ, டக்ளஸ் செல்கின்றனர்!

கொழும்பு, ஒக். 26

முல்லைத்தீவு குருந்தூர்மலை, வவுனியா வெடுக்குநாறி மலை பிரச்னைகளை சுமுகமாக தீர்த்து வைக்கும் நோக்கில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நவம்பர் முதல்வாரத்தில் அங்கு செல்லவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக

15

# திருத்தப்பட்டது மின் கட்டணம்!

கொழும்பு, ஒக். 26

கூரையில் பொருத்தும் சூரியசக்தி மின் கட்டணத்தை திருத்துவதற்கு

15



# யாழ். வருகிறார் முதல் பெண்மணி!

கொழும்பு, ஒக். 26

நாட்டின் முதல் பெண்மணியும், களனி பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட

15

# தமிழ் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தை ஆதரிக்காது

## பிரதி தலைவர் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தற்போதைய சூழ்நிலையில் ஆதரவு வழங்காது என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் அவர் நேற்று செய்தியாளர்களை

15

# மருந்துகள் தட்டுப்பாட்டுக்கு சுகாதார அமைச்சே காரணம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஒக். 26

நாட்டில் மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுபாட்டுக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட 10 விடயங்கள் அடங்கிய பரிந்துரைகளை சுகாதார அமைச்சு சரியான முறையில் பின்பற்றா

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெறுவதைத் தடை செய்யும் இருபத்தியொராவது அரசமைப்பு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இது நிறைவேற்றப்பட்டதுமே, பேராசிரியர் சன்ன ஜய சுமண ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். பாராளுமன்றத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பத்துப் பேர் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அனைவரின் பதவியையும் பறிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், அப்படி இருந்தாலும் அவர்களின் பதவியைப் பறிக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

அவர்களின் பதவியை பறிப்பது அல்லது எப்படி பற்றிப்பது என்பதற்கு அப்பால் எம் முன் எழுகின்ற முக்கிய கேள்வி, இப்படி பத்துப் பேர் பாராளுமன்றத்தில் இருந்தால் அவர்கள் இப்போதுதான் பதவியை இழக்க வேண்டியவர்களா என்பதுதான்.

பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெற்றது இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில். அப்போது நடைமுறையில் இருந்தது அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம்தான். அந்தத் திருத்தத்தின்படி இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது.

இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியும் என்ற திருத்தத்துடன்கூடிய இருபதாவது திருத்தம் ஒக்ரோபர் மாதக் கடைசியிலேயே நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் பாராளுமறன்றத்துக்கு புதிதாக வந்தவர் பஸில் ராஜபக்ஷ மாத்திரமே. அவர் தனது பதவியை ஏற்கனவே இராஜிநாமா செய்துவிட்டார். இன்று பாராளுமன்றில் இருக்கும் அனைவருமே இருபதாவது நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக பாராளுமன்றம் வந்தவர்கள்தான்.

சன்ன ஜயசுமண கூறுவதுபோல பத்துப் பேர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் அனைவருமே மக்களை ஏமாற்றியுள்ளார்கள். ஏமாற்றியுள்ளார்கள் என்பதை விட மக்களை படுமுட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் விசேஷம் என்னவென்றால், பாராளுமன்றத்தின் தலைமை தளபதியான சபாநாயகரும் தனக்குத் தெரிந்து இரண்டு- மூன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் என்கிறார். அது என்ன இரண்டு மூன்று என்பது தெரியவில்லை.

அவருக்கு தெரிந்திருந்தால், அவர்களின் பெயர்களை வெளியிட வேண்டியது மாத்திரமல்ல, அவர்களை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றவேண்டியதும் அவரின் பொறுப்பு அல்லவா?

நமது தேர்தல் சட்டத்தின்படி, இரட்டை பிரஜாவுரிமை உள்ள ஒருவர் தேர்தலில் போட்டியிட்டால் அதற்கு எதிராக ஒருவர் நீதிமன்றத்தை நாடி, அதன் ஊடாகவே அவரின் பதவியைப் பறிக்கலாம்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரிவான ஈ. பி. டி. பி. உறுப்பினர் ஒருவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நீதிமன்றத்தின் ஊடாகவே அவரின் பதவியை பறிக்க நடவடிக்கை எடுத்தார்.

ஆனால், இன்று இரண்டோ மூன்றோ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் என்றால், அது யார் என்பதையும் வெளியிடவேண்டிய பொறுப்பு சபாநாயகரிடம் உண்டு. அதன் பின்னராவது நீதிமன்றத்தின் ஊடாக அவர்களை பதவியிலிருந்து இறக்கும் பணியை செய்ய வேண்டும்.

இந்த ஊர்க்குருவியை பொறுத்தவரை இதுவே உடன்பாடான விவகாரம் அல்ல. இன்று நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள வேளையில் அதனை மீட்டெடுக்க புலம்பெயர் இலங்கையர்களை வருந்தி அழைக்கும் அரசும் அதன் தலைமையும் புலம்பெயர் இலங்கையர்கள் வெறுமனே அவர்களின் முதலீடுகளை மாத்திரம் தாருங்கள், நாங்கள் நாட்டை நிர்வகிக்கின்றோம் என்பதும் நீங்கள் முதலீடுகளுடன் நிறுத்திக் கொள்ளுங்கள் என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இன்று புலமபெயர்ந்த இலங்கையர்கள் தாம் வாழுகின்ற நாடுகளில் ஊழலற்ற நிர்வாகத்தையும் மற்றும் பல அனுபவங்களையும் கொண்டவர்கள். வெறும் பஸில் ராஜபக்ஷ என்ற ஒரு மனிதர் அரசியலில் இடம்பெறுவதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு, கொண்டு வரப்படும் இதுபோன்ற திருத்தங்கள் நாட்டுக்கு உதவப் போவதில்லை.

ஆனாலும், சட்டத்தை கொண்டுவந்த பின்னர் அதனை மதிக்காதவர்கள் அரசிலியல் இருந்தால் அவர்கள் எந்த விடயத்துக்கும் மதிப்புக் கொடுக்கப்போவதில்லை. வரம்பு மீறி நடக்கவே செய்வார்கள்.

அந்தக் களைகள் அகற்றப்பட வேண்டியவைதான்.!

**- ஊர்க்குருவி**

## கேதாரகௌரி காப்பு கட்டல் யாழ். ஆலயங்களில் சிறப்பு!



திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கேதாரகௌரி விரதோற்சவத்தின்போது...!

யாழ்ப்பாணம், ஒக். 26

இந்து மக்களின் பிரசித்தமான கேதாரகௌரி விரதத்தின் இறுதிநாளான - காப்பும் கட்டும் தினமான நேற்று யாழ்ப்பாணத்தின் சிவன், அம்மன் ஆலயங்களில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் என்பன இடம்பெற்றன.

பொதுவாக இந்த ஆலயங்களில் கேதாரகௌரிகாப்பு விரதம் உற்சவம் கடந்த 5ஆம் திகதி ஆரம்பமாகி 21 நாட்களாக சிறப்புவழிபாட்டு பூஜைகள் நடைபெற்றன. நேற்றைய தினம் கேதார கௌரிகாப்பு கட்டுவதுடன் விரதம் நிறைவடைந்து. (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று மெய்கண்டார் விழா

யாழ்ப்பாணம், ஒக். 26

மெய்கண்டாரின் குரு பூசையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறை, உயர்பட்டப் படிப்புகள் பீட சைவசித்தாந்த முதுமாணி கற்கை - அணி 7 இணைந்து நடத்தும் மெய்கண்டார் விழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவசிந்தாந்த துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்,

நல்லை ஆதீன 2வது குரு மகாசந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மேனாள் கலைப்பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், இலங்கை சர்வதேச இந்துக் குருமார் ஒன்றிய தலைவர் சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா, கௌரவ விருந்தினர்களாக உயர்ப்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன், இந்து கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சைவசித்தாந்த மரபு தொடர்பான காணொலி, பட்டிமன்றம், வில்லிசை, மற்றும் கலாநிதி கே. ரதிதரனின் நெறியாள்கை யில் மெய்கண்டார் நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (ஐ)

## குடும்பத் தகராறு கொலையில் முடிந்தது

மட்டக்களப்பு, ஒக். 26

குடும்பத் தகராறு படுகொலையில் முடிந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - - கல்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்குடா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பட்டியடிச்சேனை பிரதேசத்தில் குடும்ப தகராறு காரணமாக குறித்த பெண் ஆயுதத்தால் தாக்கப்பட்டார். இதில் பலத்த காயமடைந்த பெண் வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

## கைதான மாணவ பிக்கு மருத்துவமனையில்!

கொழும்பு, ஒக். 26

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறீ தம்ம தேரர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிய வருகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட தேரர் 90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.10,000 கொடுப்பனவு!

கொழும்பு, ஒக். 26

சீரற்ற காலநிலை காரணமாக ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால், அதனை முதலில் புகைப்படம் எடுத்து தமது பிரதேசத்தில் உள்ள கிராம அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உணவு மற்றும் பானங்களை வழங்கி வருகின்றது.

400க்கும் மேற்பட்ட வீடுகள் சிறிய மற்றும் நடுத்தர பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு அடிப்படைத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதன் பின்னர் மதிப்பீடு செய்து பணம் வழங்கப்படும்.

ஒரு எச்சரிக்கையாக, உங்கள் வீட்டுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், உடனடியாக பேரழிவின் படங்களை எடுக்கவும். அதை கிராம அலுவலரிடம் காண்பித்து, எழுத்து பூர்வமாக கோரிக்கை விடுக்க வேண்டும்.

பிரதேச செயலாளரிடம் கோரிக்கையை சமர்ப்பித்த பின்னர் நிவாரண சேவை நிலையங்கள் பணத்தை வழங்க ஏற்பாடு செய்யும். அத்தகைய வாய்ப்பை யாராவது தவறவிட்டிருந்தால், உடனடியாக கிராமசேவை அலுவலருக்கு அறிவித்து. பிராந்திய செயலாளரிடம் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

ஆரம்ப கட்டணமாக 10 ஆயிரம் மற்றும் முழு மதிப்பீட்டிற்குப் பின்னர் மீதமுள்ள கொடுப்பனவு வழங்கப்படும்.

பலத்த சேதம் அடைந்தவர்கள்கூட, முதலில் சேதத்தை புகைப்படம் எடுத்து கிராம அலுவலரிடம் தெரிவித்து சான்றிதழ் பெறவேண்டும்- என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
26.10.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நாம் மட்டும் கற்காலத்திலா?

இங்கிலாந்தின் புதிய பிரதமராக இந்தியரான ரிஷி சுனக் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அமெரிக்காவின் ஜனாதிபதியாக கறுப்பினத்தவரான பராக் ஒபாமா தெரிவானபோது உலகம் வியந்தது. ஒரு கறுப்பினத்தவர் அமெரிக்காவின் ஜனாதிபதியா? இன்றும் அவ்வாறுதான் இங்கிலாந்தின் பிரதமராக ஓர் இந்தியர் வந்திருப்பதை உலகம் ஆச்சிரியத்துடன் நோக்குகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்னர் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான என். சண்முகதாசன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அதாவது, அமெரிக்காவில் ஒரு கறுப்பினத்தவர் ஒருபோதுமே ஜனாதிபதியாக வரமுடியாதென்று கூறியிருந்தார். சண்முகதாசன் இந்தக் கருத்தைத் தெரிவித்த காலத்தில் அப்படியான நம்பிக்கைதான் இருந்தது. அன்றைய சூழலில் அப்படியானதொரு மாற்றத்தை எவராலும் கற்பனை செய்ய முடியாமல் இருந்தது. ஆனால், பின்னர் அது நிகழ்ந்தது. பிரித்தானியாவின் கடந்தகாலம் இரத்தக்கறை படிந்தது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பல்லாயிரக்கணக்கான இந்தியர்களை பிரித்தானியா கொன்றொழித்திருக்கின்றது. ஆனால், இன்று அதே பிரித்தானியாவுக்கு இந்தியர் ஒருவர் பிரதமராகத் தெரிவாகியிருக்கின்றார்.

ஒரு காலத்தில் இருந்த உலகம் இப்போதில்லை. உலக அரசியல் போக்கில் பலவாறான மாற்றங்கள் நடந்த வண்ணமிருக்கின்றன. இரண்டு உலக யுத்தங்களால் உலகம் மாற்றமடைந்தது. அதற்கு பின்னர் அமெரிக்க - சோவியத் பனிப்போரால் உலகம் மீண்டும் மாற்றங்களுக்குள்ளானது. சோவியத் யூனியனின் உடைவை தொடர்ந்து அமெரிக்கா மட்டுமே உலகின் ஒரேயொரு சக்தியாக மாறியது. உலக அரசியல் வரலாறு இத்துடன் முடிந்துவிட்டதாக அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகள் சூளுரைத்தனர். ஆனாலும், உலக அரசியல் வரலாறு புதிய அத்தியாயங்களை திறந்த வண்ணமே இருக்கின்றது. அன்று சோவியத் இருந்த இடத்தில் இப்போது சீனாவை நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இன்னொரு பனிப்போரை உலகம் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுமா - என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. ஆனால், இலங்கைத் தீவில் மட்டும் எந்தவொரு மாற்றத்துக்கான அறிகுறியும் தெரியவில்லை.

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் காலத்திலிருந்தே, இலங்கைத் தீவின் இனமுறுகல் வரலாறும் தொடர்கின்றது. இன்றுவரையில் அந்தப் பிரச்னைகள் தீர்வின்றி தொடர்கின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில் உலகில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும்கூட இலங்கையின் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் மட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் கோரிக்கைகளே தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்டன. பண்டா - செல்வா, டட்லி - செல்வா உடன்பாடுகள் இரண்டுமே ஐக்கிய இலங்கைக்குள் இணக்கமான முறையில் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கான மிகவும் குறைவான அரசியல் ஏற்பாடுகளாவே முன்வைக்கப்பட்டன. ஆனால், அந்த ஆகக்குறைந்த கோரிக்கைகளைக்கூட சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற உடன்படவில்லை. இதன் காரணமாகவே இனத்துவ அரசியல் வீரியமடைந்தது. இனங்களுக்கு இடையிலான பிளவு அதிகரித்தது.

அந்த நிலைமை இன்று விஸ்வரூபமடைந்துள்ளது. இதில் தமிழ் தலைவர்கள் என்போர் வாய்ப்புகளை கச்சிதமாகக் கையாளவில்லை என்னும் குற்றச்சாட்டும் இல்லாமலில்லை. ஆனால், அடிப்படையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களோடு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் விருப்பம் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர் என்பதுதான் இங்குள்ள அடிப்படையான பிரச்னையாகும். அதிகாரங்களை பகிர்ந்து பிரச்னைகளை தீர்ப்பதற்கு பதிலாக தமிழர்களை முற்றிலுமாக பலவீனத்துப்படுத்தும் உபாயங்கள் தொடர்பிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் சிந்திக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர்கள் என்பது அரசியல்வாதிகளும் சிங்கள - பௌத்த மதபீடங்களுமாகும்.

# உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு; பல பஸ்கள் சேவை நிறுத்தம்

*கொழும்பு, ஒக். 26*

வாகன உதிரிப் பாகங்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ்கள் உள்ளிட்ட பஸ்கள் போக்குவரத்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொடக்கவெல டிப்போ ஊடாக பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டவந்த 5 பாடசாலை பஸ் வண்டிகள் போக்குவரத்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதுபோன்று பல்வேறு டிப்போக்களுக்குச் சொந்தமான பஸ் வண்டிகளும் பொதுப் போக்குவரத்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொடக்கவெல டிப்போவுக்கு சொந்தமான குறித்த 5 பஸ்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதால் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும், சில பஸ் வண்டிகளுக்கு குறித்த உதிரிப்பாகங்கள் பொறுத்தப்பட்டு திருத்தப் பணிகள் மேற்கொண்ட வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பஸ்களின் ரயர், ரியூப், பற்றரி ஆகியவற்றை கொண்டு வந்து பாவனையிலிருந்து அப்புறுப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இரு பேருந்துகள் விபத்து; பெண் பலி; 30 பேர் காயம்!

*கொழும்பு, ஒக். 26*

இரு பயணிகள் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



கொழும்பு - கண்டி வீதியில் கேகாலை மாவனெல்லை - உதுவன்கந்தை என்ற இடத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

கேகாலையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் தனியார் பேருந்துமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் காயமடைந்தவர்கள் மாவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் பெண் உயிரிழந்தார். ஏனையவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவனெல்லை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பெண்ணிடம் சங்கிலி, கைபேசி வழிப்பறி!

*தென்மராட்சி, ஒக். 26*

யாழ்ப்பாணம் - கச்சாய் வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியும் அவரின் பெறுமதிவாய்ந்த கைபேசியும் வழிப்பறிகாரரால் அபகரித்து செல்லப்பட்டுள்ளன.


இந்த சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் கச்சாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீதியால் நடந்து சென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை பறித்ததுடன், அவரின் கைப்பையையும் அபகரித்து சென்றனர்.

அந்தக் கைப்பையில் கைபேசி, ஏ. ரி. எம். அட்டை என்பன இருந்தன என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 26 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஐப்பசி 09
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பிரதமை




**மேடம்**
இன்று ஆதாயமான நிலை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து மகிழ்விக்கும்.நீங்கள் நினைத்ததை இன்று சாதித்து முடித்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

**இடபம்**
எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். மனதில் தைரியம் பிறக்கும்.தடைகளைச் சரிசெய்வீர்கள். முயற்சியில் உங்கள் முன்னேற்றம் உண்டாகும்.உடல் நிலையில் இருந்த பாதிப்பு விலகி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
சுபச்செலவு அதிகரிக்கும். அதற்கேற்ப வரவு ஏற்படும். எதிர்பார்த்த வருமானம் வரும். புதிய முயற்சி வெற்றி பெறும். பொன் பொருள் சேரும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். சொத்து பிரச்னை தீரும்.

**கடகம்**
தைரியம், தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். விருந்தினர் வருகை தருவர்.

**சிம்மம்**
உங்கள் செயல்களில் எதிர்பார்த்த வரவு வந்து சேரும் லாபமான நாள்.பழைய பிரச்னைகளை சரிசெய்வீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.திறமை வெளிப்படும். நீங்கள் ஈடுபடும் செயல்களில் லாபம் கிடைக்கும்.

**கன்னி**
வரவுகளில் இருந்த தடை அகலும். குடும்பத்தில் உற்சாகம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். செல்வாக்கு உயரும்.சிலருக்கு எதிர்பாராத பணவரவு உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்**
எதிர்பாராத சம்பவம் நடைபெறும்.குடும்பத்தின் நலனுக்கான ஒரு முடிவை துணிச்சலுடன் மேற்கொள்வீர்கள்.உடன் பணியாற்றுபவர்களின் ஒத்துழைப்பால் எண்ணம் நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத செலவு, அலைச்சல் உண்டாகும். செயலில் கவனம் வேண்டும். வாழ்க்கைத் துணையுடன் உண்டான பிரச்னை விலகி மகிழ்ச்சி அடைவீர்கள்.திடீர் செலவுகளை சந்திப்பீர்கள்.

**தனுசு**
நிதி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். திடீர்வரவால் மகிழ்வீர்கள்.திட்டமிட்டு செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றுவீர்கள். ஆதாயம் கூடும். குடும்பத் தேவை நிறைவேறும். நவீன பொருட்கள் வாங்குவீர்கள்.

**மகரம்**
தொழிலில் லாபம் காண்பீர்கள்.போட்டியாளர் விலகிச் செல்வர். பொருளாதார நிலை உயரும். எண்ணம் நிறைவேறும்.இழுபறியாக இருந்த செயலில் உங்களுக்கு சாதகமான நிலை உண்டாகும்.

**கும்பம்**
நண்பர்களின் ஆதரவால் செயல் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.நீண்ட நாளாக நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு தகவல் வந்து சேரும். நிறைவேறாது என நினைத்திருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும்.

**மீனம்**
பேச்சு, செயலில் கவனம் தேவை. யோசித்து செயல்பட வேண்டிய நாள்.நினைப்பதை செயல்படுத்த முடியாமல் போகும். குழப்பம் அதிகரிக்கும்.கோபத்தை உண்டாக்கும் வகையில் சிலர் செயல்படுவர். நிதானம் அவசியம்.

# கோயம்புத்தூர் கார் குண்டு வெடிப்பு; தற்கொலை தாக்குதல் வாய்ப்பு குறைவு



கோவை, ஒக். 26

கோவையில் காரில் சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்பட்டார். அவரின் வீட்டில் சோதனை நடத்திய போது, நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் வேதிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக டி. ஜி. பி. சைலேந்திரபாபு தெரிவித்தார்.

சம்பவ இடத்தில் உயிரிழந்த நபர் உக்கடத்தைச் சேர்ந்த ஜமேஷா முபின் (25) எனத் தெரியவந்தது. காரில் சில தடயங்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. அதில் ஆணிகள், கோலி குண்டுகள் உள்ளிட்டவை கிடைத்துள்ளன. காரில் இருந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டு தடய அறிவியல் துறைக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

ஜமேஷா முபினின் வீட்டை சோதனை செய்த போது, நாட்டு வெடிகுண்டு தயாரிப்பதற்கான வேதிப்பொருட்கள் உள்ளிட்டவை கண்டறியப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டது. இவர் மீது முன்னர் வழக்குகள் இல்லை. இவர் தொடர்புடைய நபர்களிடம் விசாரித்து வருகிறோம். சம்பவம் நடந்த 12 மணி நேரத்துக்குள் உயிரிழந்தவர் யார் என கண்டறிந்துள்ளோம்.

இதில் தொடர்புடைய காரை முதலில் வாங்கிய நபருக்கும், கடைசி நபருக்கும் இடையே 9 பேருக்கு தொடர்புள்ளது. 10ஆவது நபர்தான் காரை இவருக்கு கொடுத்துள்ளார். சிலிண்டர் எங்கிருந்து வந்துள்ளது என்பதையும் கண்டறிந்துள்ளோம். 6 தனிப்படையினர் பல்வேறு கோணங்களில் விசாரித்தனர்.

பொலிஸாரின் சோதனை தீவிரமாக இருந்ததால் அவரால் தப்பிச் செல்ல முடியவில்லை. ஜமேஷா முபினிடம் சில ஆண்டுகளாக தொடர்பு வளையத்தில் இருந்த நபர்களை விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளோம். எங்கு சென்று கொண்டிருந்தார் என்பது புலன் விசாரணையின் இறுதியில்தான் தெரியவரும். அவர் என்ன திட்டமிட்டிருந்தார் என்பதும் நமக்கு தெரியவில்லை. தற்கொலை தாக்குதலுக்கு வாய்ப்பு குறைவு. இந்த வழக்கில் நிறைய முன்னேற்றம் உள்ளது. என்.ஐ.ஏ விசாரணை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் - என்றார். (ஐ)

# கோவை குண்டுவெடிப்பில் இறந்தவருக்கு ஈஸ்டர் தாக்குதல் கைதியுடன் தொடர்பு!

சென்னை, ஒக். 26

கோவையில் காரில் சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் இறந்த ஜமேஷா முபினுக்கும் இலங்கையின் ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய கைதிக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கோவை மாநகரத்தின் முக்கிய பகுதியான கோட்டை ஈஸ்வரன் கோவில் வீதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கார் வெடித்து அதில் இருந்தவர் பலியானார்.

இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் பலியானவர் அவரது பெயர் ஜமேஷா முபின். இவர் உக்கடம் பகுதியை சேர்ந்தவர். இந்த சம்பவம் குறித்து விசாரிக்க 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டது. ஜமேஷா முபின் வீட்டில் வெடிபொருட்கள் கைபற்றபட்டன. அத்துடன், ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோவையில் காரில் சிலிண்டர் வெடித்த நிகழ்வில் இறந்த ஜமேஷா முபினுக்கும் இலங்கை குண்டுவெடிப்பு கைதிக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டுள்ளது.

2019 கொழும்பு தேவாலய குண்டுவெடிப்பு தொடர்பாக கைதான முகமது அசாருதீனை ஜமேஷா முபின் சந்தித்தார். கொழும்பு தேவாலய குண்டு வெடிப்பு தொடர்பாக கைதான மூன்று நபர்களில் ஒருவர் முகமது அசாருதீன். அவரை ஜமேஷா முபின் கேரள சிறையில் சந்தித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 48 இலங்கை அகதிகளுக்கு கடவுச் சீட்டு வழங்கப்படும்!

## சிறுபான்மை நலத்துறை அமைச்சர்

திருச்சி, ஒக். 26

தமிழகத்தின் மரக்காணம் முகாமில் வசிக்கும் 48 இலங்கை அகதிகளுக்கு இந்திய கடவுச் சீட்டு மற்றும் பிற நலத்திட்டங்கள் வழங்கப்படும் என சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே. எஸ். மஸ்தான் அறிவித்துள்ளார்.

மரக்காணம் கீழ்புதுப்பட்டு கிராமத்தில் ஏதிலிகளுக்கு 440 இலவச வீடுகளை நிர்மாணிக்கும் ஆரம்ப நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தநிலையில் இலங்கை ஏதிலிகளின் புனர்வாழ்வு முகாமுக்கு மாதாந்த நிதியுதவி வழங்கும் செயல்முறை அடுத்த மாதம் முதல் எளிமைப்படுத்தப்படும். மேலும், புனர்வாழ்வு முகாம்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் பிற நலத்திட்டங்களைப் போன்று அவர்களின் வங்கிக் கணக்கில் உதவித் தொகையை வரவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விழுப்புரம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், தமிழக அரசாங்கத்திடம் இந்த நிகழ்வின்போது கோரிக்கையை முன்வைத்தார்.

முகாம்களில் உள்ள பெரும்பாலானோர் தமிழகத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். அத்துடன், இலங்கையில் 13 ஆண்டுகளுக்கு முன் நடந்த போரால், தமிழக அரசு ஏதிலி முகாம்களுக்கான 'கியூ' பிரிவு பாதுகாப்பை திரும்பப் பெற வேண்டும் என்றும் ரவிக்குமார் வலியுறுத்தினார்.

குடியுரிமைச் சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு, திருச்சி மறுவாழ்வு முகாமில் தஞ்சமடைந்த பெண் சமீபத்தில் இந்திய கடவுச்சீட்டை பெற்ற வழக்கை மேற்கோள் காட்டிய ரவிக்குமார், அத்தகைய கடவுச்சீட்டுக்களுக்கான ஏதிலிகளை கண்டறிந்து, அனைவருக்கும் ஆவணங்களை வழங்குமாறும் தமிழக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (ஐ)

# சீரற்ற காலநிலை: 6 பேர் உயிரிழப்பு

## 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 26

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், அறுவர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, 13 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 478 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களினால் 8 வீடுகள் முழுமையாகவும் 393 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோ கட்டணம் 20 ரூபா குறையும்

கொழும்பு, ஒக். 26

ஓட்டோக்களுக்கான முதல் கிலோமீற்றருக்கு அறவிடப்படும் கட்டணத்தை 20 ரூபாயால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கியூ.ஆர். முறையின் கீழ் தொழில்முறை முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை இரட்டிப்பாக்க அரசாங்கம் தீர்மானித்ததன் மூலம் இந்த விலை குறைப்பை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில்முறை ஓட்டோச் சங்கங்களுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

அதன்படி, இதுவரை ஓட்டோக்களுக்கு 5 லீற்றர் பெற்றோல் மாத்திரமே வழங்கப்பட்டு வந்த நிலையில், அதனை இரட்டிப்பாக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# தொழில் வல்லுநர்கள் இடம்பெயர்வை புதிய வரி கொள்கை அதிகரிக்கின்றது!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 26

**அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், நாட்டிலிருந்து தொழில் வல்லுநர்களின் இடம்பெயர்வு அதிகரித்து, அது சுகாதாரம் மற்றும் பிற துறைகளை அதலபாதாளத்தில் தள்ளக்கூடும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எனவே, இவ்வாறான நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்க அந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே, வரிக் கொள்கையில் திருத்தங்களை சமர்ப்பிக்கும் பாரிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கை மற்றும் நிபந்தனைகளின்படி வரிக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன என்பது தெளிவாகவுள்ளதுடன், மறைக்க எதுவும் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளின் அழுத்தம் காரணமாகவே இந்த வகையான வரிக் கொள்கைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது என்பது பகுப்பாய்வு செய்த பலரின் கருத்தாக உள்ளது.

இந்த வரிக் கொள்கைகளின் விளைவாக பல மருத்துவர்கள், கணக்காளர்கள், பொறியாளர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் உள்ள ஏனைய மருத்துவமனைகளில் இந்த நிலைமை மோசமாக உருவாகி வருகிறது. பெரும்பாலான சிறப்பு மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இதனால், பெரும்பாலான மருத்துவமனைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (அ)

# இலங்கை குடியுரிமை இல்லாத இருவர் எம்.பிக்களாக உள்ளனர்

கொழும்பு, ஒக். 26

பாராளுமன்றத்தில் 10 பேர் இரட்டைக் குடியுரிமையுடன் இருப்பது பகிரங்கமான இரகசியம் என்றாலும், இந்த நாட்டின் பிரஜைகளாக இல்லாத இருவர் பாராளுமன்றத்தில் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசியலமைப்பின்படி 2020 ஓகஸ்ட் மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டதாகவும், அந்த அரசியலமைப்பின்படி இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் போட்டியிட முடியாது என்றும், எனவே அவர்கள் போட்டியிட்டபோது அப்படியொரு விதி இல்லை என்ற வாதம் முற்றிலும் தவறானது என்றும் அவர் கூறினார்.

அவர்கள் அனைவரையும் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# பொதுமன்னிப்பளிக்கப்பட்ட மூன்று பேர் சந்திரிகா கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவர்கள்

## விடுதலையின் முன் அவரின் சம்மதமும் பெறப்பட்டது

கொழும்பு, ஒக். 26

இலங்கையின் அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின்படி, இலங்கை நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இதன்படி, மன்னிப்பு வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் மூவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டவர்களாவர்.

இந்தக் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்னர், ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் கலந்துரையாடி, அவரின் சம்மதத்தைப் பெற்றதன் பின்னர், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பல தடவைகள் இடம்பெற்ற கலந்துரையாடலின் பலனாக இந்த கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவர்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின் பேரில் இவர்களிடம் ஆரம்பகட்ட விசாரணை நடத்தப்பட்டது. ஒப்புதல் அறிக்கை குறித்து நீதி அமைச்சர் மற்றும் அவர் மூலமாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய நான்கு அரசியல் கைதிகளும் தண்டனை குறைக்கப்பட்டதை அடுத்து விடுதலை செய்யப்பட்டனர்.

அமைப்புடன் தொடர்புடைய இரண்டு தமிழ் விடுதலைப் புலிகள் கைதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு மேலும் இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் மூன்று கைதிகளுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர், 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த ஒரு கைதி,

10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 14 ஆசிறைவாசம் அனுபவித்த ஒரு கைதி,

ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு கைதிகள், ஆனால் 14 ஆண்டுகள் சிறையில் உள்ளனர். 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இதுவரை 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த மற்றொரு நபர் ஜனாதிபதி மன்னிப்பு பெற்றவர்களில் அடங்குவர். (அ)

# மீன்களின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 26

சந்தையில் மீன்களின் விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளை உரிய முறையில் வழங்க முடிந்தமையினால் மீன் பிடிப்பு அதிகரிப்பு மற்றும் வலை மீன்பிடி அதிகரிப்பே காரணம் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# மழை நீடிக்கும்

கொழும்பு, ஒக். 26

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும்வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# இன்னொரு தொகுதி அரசியல் கைதிகள் பொங்கலுக்கு விடுதலை செய்யப்படுவர்

## மனோவிடம் ஜனாதிபதி ரணில் உறுதி

**கொழும்பு, ஒக். 26**
**''தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப் பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக என்னிடம் நேரில் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.''**



- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு பற்றியும், கொழும்பில் பொலிஸ் பதிவு பற்றியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடினோம்.

பொலிஸ் பதிவு பற்றி மீண்டும் ஒருமுறை ஐ.ஜிக்குப் பணிப்பதாக ஜனாதிபதி சொன்னார்.

தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப் பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி மேலும் சொன்னார்.

அருகிலிருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சாகல, யோகராஜன் ஆகியோரும் சாதகமாகக் கருத்து பகிர்ந்தனர்.

மலையக மக்கள் மத்தியிலான பெருந்தோட்டப் பிரிவினர் பற்றி நான் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை பற்றி ஜனாதிபதி அறிந்திருந்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளிலேயே 51 வீத உணவின்மை பிரச்சினை காணப்படுகின்றது என்று கூறினேன். பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளை ஆராய, செயலணி ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரினேன். ஜனாதிபதி கொள்கை ரீதியாக உடன்பட்டார் - என்றார். (அ)

# சேவையை தொடர நாம் கோரிய 30 லீற்றர் பெற்றோலை தாருங்கள்!

## ஓட்டோச் சாரதிகள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 26

வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை ஐந்து லீற்றர் அதிகரிக்குமாறு ஜனாதிபதி பரிந்துரை செய்த போதிலும் சேவையைத் தொடர தாம் கோரிய 30 லீற்றர் பெற்றோலை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக ஓட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தேசிய கூட்டு ஓட்டோச் சாரதிகள் மற்றும் கைத்தொழில் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா நேற்று செவ்வாய்க்கிழமை ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது தாங்கள் எதற்காக 30 லீற்றர் பெற்றோல் கேட்கின்றோம் எனக் குறிப்பிட்டோம்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் தங்களின் பிரச்சனைக்கு பதில் கூறாமல் அலட்சியமாக இருந்தனர். எனினும் பின்னர் ஜனாதிபதி 5 லீற்றர் பெற்றோலுக்கு பரிந்துரை செய்தார்.

ரயர்கள், ரியூப்கள், பற்றரிகள் மற்றும் வாகன சேவைக் கட்டணங்கள் மீதான வரிகள் இன்னும் அதிகமாக இருப்பதால் சேவையைத் தொடர இது உதவாது.

எங்களுக்கு 15 லீற்றர் பெற்றோல் கிடைக்கும் என்று உறுதி செய்யப்படாத வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் தேவையான அளவு கிடைக்கும் வரை, கட்டணத்தை குறைப்பது பற்றி யோசிக்க முடியாது.

எனவே எங்களின் சேவையை வலுப்படுத்தும் வகையில் எங்களது கோரிக்கையை பரிசீலிக்குமாறு மீண்டும் அரசிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ)

# மொட்டிலிருந்தபடி யானையை ஆதரிக்குமாறு சொல்கிறார்கள்!

## பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஒக். 26

மினுவாங்கொடை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்குழு உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப் பின் பெறுபேறு தனக்கு கிடைத்துள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதியுடன் நெருக்கமாக செயற்படுவதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்துள்ளதாகவும் அரசாங்கத்தின் பிரதம கொறடா மற்றும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதேநேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பது யானை மீது ஏறி சவாரி செய்வதல்ல எனவும் இவ்வாறு ஆதரவு தெரிவிப்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விட்டு விலகுவதாக அமையாது எனவும் அமைச்சர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகாமல் எதிர்கால அரசியல் தீர்மானத்தை எடுப்பதற்காகவே மினுவாங்கொடை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்குழு உறுப்பினர்கள் மத்தியில் இரகசிய வாக்கெடுப்பை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் ரணதுங்க ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வழங்கியுள்ளார்.

தாம் எப்போதும் மனச்சாட்சிக்கு இணங்க சரியான அரசியல் தீர்மானங்களை எடுத்துள்ளதாகவும், மக்கள் கருத்துக்கு பணிந்து தேவையான நேரத்தில் தேவையான அரசியல் தீர்மானங்களை எடுக்க தயங்கப்போவதில்லை எனவும் அமைச்சர் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

என் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டேன்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் முயற்சிகளை கைவிடாமல் சகலரும் ஆதரவளிக்க வேண்டும் என்பதே மினுவாங்கொடை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுவின் நிலைப்பாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

“எனவே, இது பெரமுன கட்சியை விட்டு வெளியேறுவது பற்றி அல்ல, ஆனால், பெரமுனவின் பொதுக் கருத்தைப் பாதுகாப்பதற்காக இந்த தருணத்தில் எடுக்கக்கூடிய மற்றும் எடுக்கப்பட வேண்டிய சிறந்த முடிவு இதுவாகும்.

கம்பஹா மக்களுக்கு துரோகம் செய்யத் தயாரில்லை. அவர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையை உடைக்கத் தயாரில்லை“ என்றும் அமைச்சர் தெரிவித்தார். எவ்வாறாயினும், மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து தேவையான நேரத்தில் தயக்க மின்றி தேவையான அரசியல் தீர்மானத்தை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# இணுவில் பகுதியில் வைத்து சிறுவன்மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 26

இணுவில் பகுதியில் சிறுவன் மீது வன்முறை கும்பல் ஒன்றினால் வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

உரும்பிராய் பகுதியை சேர்ந்த முருகதாஸ் மனோஜ் (வயது 17) எனும் சிறுவனே படுகாயமடைந்துள்ளான்.

குறித்த சிறுவன் பாடசாலை கல்வியை இடைநிறுத்தி , இணுவில் பகுதியில் உள்ள அலங்கார பொருட்கள் விற்பனை யகம் ஒன்றில் வேலை பார்த்து வருகிறான்.

அந்நிலையில் சிறுவன் விற்பனை அகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது சைக்கிளில் வீடு நோக்கிச் செல்லும்போது, தெல்லிப்பளைப் பகுதியில் இருந்து மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று சிறுவனை வழி மறித்து வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

காயமடைந்த சிறுவனை அங்கிருந்தவர்கள் மீட்டு , சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். (அ)

# வவுனியாவில் மாணவர்களிடையே வேகமாக பரவும் போதை பாவனை!

வவுனியா, ஒக். 25

வவுனியாவில் மாணவர்களிடையே வேகமாக போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதால் பெற்றோரும், பாடசாலை சமூகத்தினரும் விழிப்பாக இருக்க வேண்டும் என மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் நகரை யண்டிய சில பாடசாலைகளில் சில மாணவர்கள் மற்றும் சில மாணவிகள் போதைப் பொருள் பாவனையில் ஈடுவதாக எமக்கு தனிப்பட்ட ரீதியிலும், பொலிஸார் ஊடாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப அவர்களை அதில் இருந்து விடுபடச் செய்வதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் பல பாடசாலைகளில் மாணவர்கள் போதைப் பொருட்களை கொண்டு வருவதாகவும், அதனை தமது சக மாணவ, மாணவிகளிடம் கைமாற்றுவதாகவும் தகவல் கிடைத்துள்ளபோதும் சில பாடசாலைகள் தமது பாடசாலையின் பெயரைக் கருத்தில் கொண்டு அதனை வெளிக்கொண்டு வர தயக்கம் காட்டுகின்றன.

மாலை வேளைகளில் வவுனியா வைரவப்புளியங்குளம், பூங்கா வீதி, குடியிருப்பு, குருமன்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு வரும் வெளிப் பகுதிகளைச் சேர்ந்த இளம் சமூகத்தினர் போதைப் பொருட்களை பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பிலும் அவர்களது நடத்தைகள், அவர்களது நண்பர்கள், அவர்கள் சென்று வரும் இடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் மாணவ சமூகத்தின் மீது அக்கறையுடன் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வகையில் பாடசாலைகளில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

வடக்கில் யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் அதனால் ஏற்படும் விபரித விளைவுகள் குறித்து நாம் தினமும் அறிந்து வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் இந்த நிலை அதிகரித்து வருகின்றது. இதனால் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு போதைப் பொருள் பாவனையற்ற சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும் - என்றார். (அ)

# தெற்காசியர் பிரிட்டனை வழிநடத்துவதில் பெருமை!

*ரிஷி சுனக்கிற்கு சந்திரிகா வாழ்த்து*

**கொழும்பு, ஒக். 26**

**பிரித்தானியாவின் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, பிரித்தானியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள ரிஷி சுனக்கிற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.**

தெற்காசியாவைச் சேர்ந்த ஒருவர் பிரித்தானியாவை வழிநடத்துவதில் பெருமையடைகிறேன் என அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், "கன்சர்வேடிவ் கட்சித் தலைமை மற்றும் பிரித்தானியாவின் பிரதமருக்கான தேர்தலில் வெற்றி பெற்றதற்கு ரிஷி



சுனக்கிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சுனக்கின் வெற்றி தெற்காசியாவில் உள்ளவர்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். ஏனெனில் இது பிரித்தானியாவில் ஜனநாயக நிறுவனங்கள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

தெற்காசியாவைச் சேர்ந்த ஒருவர் பிரித்தானியாவை வழிநடத்துவதில் பெருமையடைகிறேன்" என தெரிவித்துள்ளார். (அ)

## பதிவு செய்யாமல் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்க முடியாது

கொழும்பு, ஒக். 26

பயணிகள் போக்குவரத்து ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு முன்னர் உரிய ஓட்டோக்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

முறையான கட்டுப்பாடு இல்லாமல் அனைத்து ஓட்டோக்களுக்கும் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியாது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இப்போது உள்ளது போல், பதிவு இல்லாமல் ஒரே நேரத்தில் எரிபொருள் வழங்கினால், எல்லோருக்கும் வழங்க முடியாத நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (அ)

*யால பூங்கா விவகாரம்*

## 7 அதிகாரிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 26

யால பூங்காவில் பல வாகனங்கள் அத்துமீறி நுழைந்து சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறிய அதிகாரிகளின் சேவைகள் விசாரணைகள் முடியும் வரை இடைநிறுத்தப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திர ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த குழுவுடன் பயணித்த வழிகாட்டிகளின் சேவையும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றால், அதிகாரிகள் தலையிட்டு அல்லது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்திருக்க முடியும், ஆனால் அவர்கள் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய 7 சபாரி வழிகாட்டிகளின் சேவையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யால பூங்காவில் சட்டவிரோதமாக வன விலங்குகளை துன்புறுத்தும் நபர்களை கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்புமாறு வன ஜீவராசிகள் அமைச்சின் செயலாளருக்கு வனஜீவராசி கள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

## கொழும்பு தேசிய வைத்தியசாலை நோயாளர்களிடம் பணம் திருட்டு!

கொழும்பு, ஒக். 26

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் தங்க நகைகளைத் திருடுவோர் தொடர்பில் தகவல்கள் பதிவாகியுள்ளன.

நோயாளர்களை பார்வையிட செல்லும் போர்வையில், குறித்த குழுவினர் திருட்டில் ஈடுபடுவதாக தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதற்கு வைத்தியசாலையிலுள்ள சில ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

நோயாளர்களின் பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் தங்க நகைகளை திருடிய சிலர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

## லீசிங் செலுத்த தவறியோரின் வாகனங்களை வலுக்கட்டாயமாகப் பறித்து செல்லமுடியாது!

கொழும்பு, ஒக். 25

லீசிங் மாதாந்த கொடுப்பனவை செலுத்த தவறி, நிர்கதிக்குள்ளாகியுள்ள நபர்களின் வாகனங்களை (வாகனங்களை வலுக்கட்டாயமாக கொண்டு செல்லும் நபர்கள்) வலுக்கட்டாயமாக கொண்டு செல்வதற்கு எந்தவித அதிகாரங்களும் அவர்களுக்கு கிடையாது என ஒன்றிணைந்த போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் தலைவர் சம்பத் ரணசிங்க தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பு - என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊடக சந்திப்பிற்கு, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

"எந்தவொரு ஊடக சந்திப்பொன்றும் இவ்வாறு நடத்தப்பட்டிருக்காது. விசேட பொலிஸ் பாதுகாப்பை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். ஊடக சந்திப்பிற்கு பொலிஸ் பாதுகாப்பு பெற்றுக் கொள்ளப்பட்டமையானது, லீசிங் மாபியா எந்தளவிற்கு கொடூரமானது என்பதற்கு இதுவொரு உதாரணமாகும்" என ஒன்றிணைந்த போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் தலைவர் சம்பத் ரணசிங்க தெரிவித்தார்.

லீசிங் மாதாந்த கொடுப்பனவை செலுத்த தவறும் பட்சத்தில், அதனை பறித்துக் கொண்டு செல்ல சட்டத்தில் எந்தவித அதிகாரமும் கிடையாது.

சுற்றறிக்கையில் அவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## இரு குழுக்களுக்கிடையே மோதலில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஒக். 26

ஒன்றாக மது அருந்திக் கொண்டிருந்த போது இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் கலஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு புபுரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெவலன் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 05 பேர் கைது செய்யப்பட்டதாக புபுரஸ்ஸ பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புபுரஸ்ஸ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## எடை குறைந்த பாண் விற்பனை செய்த 100 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக். 26

குறைந்த எடைக்கு பாண்களை விற்பனை செய்த 100 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எடை குறைவான பாண்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஒரு இறாத்தல் பாண் 450 கிராம் எடை இருக்கவேண்டும். சரியான எடை இல்லாமல் பாண்ணை விற்பனை செய்பவர்களுக்கு ரூ.1000 அபராதம் விதிக்கப்படுவதுடன், . தனிப்பட்ட வணிக உரிமையாளருக்கு ரூ. 10,000 விதிக்கப்படுகிறது.

குறைந்த எடையில் பாண்ணை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு ரூபா 10,000 முதல் ரூபா 100,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

அதிக விலையை வசூலிக்கும் பேக்கரிகள் தொடர்பில் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தெரியபடுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை மக்களைக் கேட்டுள்ளது. (அ)

## 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலைக்காக நாட்டைவிட்டு வெளியேற்றம்!

கொழும்பு, ஒக். 26

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை இவ்வருடம் 2 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.35 மணி நிலவரப்படி 2 இலட்சத்து 54 ஆயிரத்து 938 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். (அ)



# நயன்தாராக்களின் குழந்தைகள்

## வறுமையின் கருப்பையில் பிறக்கிறார்கள்

**— செ.கார்கி**

நடிகை நயன்தாரா - இயக்குனர் விக்னேஷ் சிவன் ஆகியோர் சரோகசி (‘ஒருவருக்குப் பதிலாக’) அல்லது வாடகைத் தாய் முறையின் மூலம் இரட்டை குழந்தைகள் பெற்றுக் கொண்டது பெரும் சர்ச்சையாகி இருக்கின்றது.

இதற்கு முன்பும் பல திரைப் பிரபலங்கள் குறிப்பாக பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா, நடிகர் ஷாருக்கான், நடிகர் அமீர்கான், நடிகை ஷில்பா ஷெட்டி, நடிகை சன்னி லியோன் ஆகியோர் இப்படி வாடகைத் தாய் முறை மூலம் குழந்தை பெற்றுக் கொண்டாலும் அப்போதெல்லாம் ஆகாத சர்ச்சை இப்போது ஆகியிருக்கின்றது. இவர்களில் பலர் வாடகைத் தாய் முறையை ஒழுங்குபடுத்துவதற்கான இந்திய மத்திய அரசின் சட்டங்கள் வருவதற்கு முன்பு குழந்தை பெற்றுக் கொண்டவர்கள். மத்திய அரசால் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மகப்பேறு உதவி தொழில்நுட்ப கட்டுப்பாடு சட்டம் 2021, வாடகைத் தாய்மை கட்டுப்பாடு சட்டம் 2020 என குழந்தைப் பேறு குறித்த இரண்டு சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

மக்களவையில் 2019ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதியன்று இதற்கான மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு, 2021ஆம் ஆண்டின் இறுதியில் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் இந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, குடியரசு தலைவரின் ஒப்புதலுடன் 2022 ஜனவரி மாதம் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இந்த சட்டம் வாடகைத் தாய்மை முறையை, சில கட்டுப்பாடுகளோடு வரையறுத்துள்ளது. ஒரு தம்பதிக்காக வாடகைத் தாயாக இருந்து குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண், குழந்தை பிறந்த பிறகு அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மகப்பேறின்மை பிரச்சினை ஒரு தம்பதிக்கு இருந்தாலோ அல்லது அது தொடர்பான ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலோ மட்டுமே வாடகைத் தாய் முறை அனுமதிக்கப்படும்.

அப்படி வாடகைத் தாயாக இருக்க முன்வருபவர், 25 முதல் 35 வயதுக்கு உட்பட்டவராகவும், பெற்றோராக விரும்பும் தம்பதிக்கு நெருக்கமான உறவினராகவும் இருக்க வேண்டும். இதை வணிக நோக்கோடு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த முறைப்படி குழந்தை பிறந்தவுடன், முற்றிலும் உயிரியல் ரீதியாக தம்பதியின் குழந்தையாகவே அது கருதப்படும்.

இந்திய மருத்துவ சுற்றுலாவை ஊக்குவிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக வாடகைத் தாய் முறையை 2002 இல் சட்டப்படி செல்லத்தக்க தாக்கியது. வெளிநாடுகளில் இருந்து இந்தியாவில் வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள மருத்துவமனைகள் 2014 ஆம் ஆண்டுக்கு முன்பே 15000 முதல் 20000 டாலர் வரை கட்டணம் வசூலித்தன.

ஆனால் இவர்கள் அமெரிக்காவில் இப்படி வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் 50,000 முதல் 1,00,000 டாலர் வரை செலவாகும்.

இதில் வாடகைத்தாய்க்கு கிடைக்கும் பணம் என்பது 5000 முதல் 6000 டாலர் ஆகும். இரட்டை அல்லது மூன்று குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிறந்தால் இன்னும் கொஞ்சம் கூடுதலாக சம்பாதிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

இந்தியாவைத் தவிர அமெரிக்கா, பெல்ஜியம், கனடா, இஸ்ரேல், ஜார்ஜியா போன்ற நாடுகளும் வாடகைத் தாய் முறையை அனுமதிக்கின்றன.

இந்தியாவில் நிலவும் கடுமையான வறுமை, குறிப்பாக பொருளாதார சுதந்திரம் பெறாதவர்களாக பெண்கள் இருப்பது வாடகைத்தாய் முறை வளர்வதற்குக் காரணமாக இருக்கின்றது.

உறவினர்கள்தான் வாடகைத் தாயாக இருக்க வேண்டும் என சட்டம் இருந்தாலும், இந்த விதி பெரும்பாலும் பின்பற்றப்படுவதில்லை. அதற்கு முக்கிய காரணம் மற்றவர்களுக்காக வயிற்றில் குழந்தையை சுமந்து, அதன் மூலம் வரும் பணத்தில் வாழ்வதை பெரும்பாலான இந்தியப் பெண்கள் விரும்புவதில்லை. மிக மோசமான வறுமையில் இருக்கும் பெண்களே இதற்கு ஒப்புக் கொள்கின்றார்கள்.

அவர்கள் குழந்தை பெறும் காலம் வரை ஒரு கைதியைப் போல மருத்துவமனைகளில் அடைத்து வைக்கப் படுகின்றார்கள். வெளி உலக தொடர்புகளில் இருந்து முற்றிலும் துண்டிக்கப் படுகின்றார்கள். அவர்கள் யாருக்காக குழந்தை பெற்றுத் தருகின்றார்களோ அவர்களை பார்ப்பதற்குக்கூட அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த வாடகைத்தாய் முறையில் இருப்பது அப்பட்டமான வணிக சிந்தனை மட்டுமே ஆகும். அதைத் தாண்டி எந்த மனித விழுமியங்களும் இதில் கிடையாது. கருவை சுமக்கும் தாய் இறந்து போனால் கூட அதற்கு மருத்துவமனையோ, பணம் கொடுத்து கருவை சுமக்க வைத்தவர்களோ பொறுபேற்றுக் கொள்ளத் தேவையில்லை என்ற நிலைதான் நீடிக்கின்றது. மேலும் குழந்தை பெற்றுக் கொடுத்தவுடன் அந்தத் தாய்க்கும் குழந்தைக்குமான உயிரியல் பிணைப்பு முற்றிலுமாக தடுக்கப் படுகின்றது.

வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பும் பணக்காரர்கள் யாரும் அனாதைக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை விரும்புவதில்லை. அதற்கு முக்கிய காரணம் தங்களுடைய சொத்தை அனுபவிக்கும் உரிமை தங்களுடைய உயிரியல் வாரிசுகளுக்கு மட்டுமே உள்ளது என்ற பிற்போக்கு சிந்தனைதான்.

இந்தியாவில் ஏறக்குறைய 30 லட்சம் குழந்தைகள் ஆதரவற்றவர்களாக இருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகள் நிதியம் யுனிசெப் கூறியிருக்கிறது. இதில் 4.70 லட்சம் குழந்தைகள் அரசின் காப்பகங்களில் இருக்கிறார்கள் என்று இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் 2017-ல் உறுதி செய்திருக்கிறது.

இதுமட்டுமல்லாமல் கோவிட்-19 நோயினால் இந்தியாவில் 1.2 லட்சம் குழந்தைகள் பெற்றோர்களில் ஒருவர் அல்லது இருவரையும் இழந்திருக்கின்றனர் என்று தி லான்செட் ஆராய்ச்சிப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

குழந்தைகளைத் தத்து எடுக்க வேண்டும் என்றால் ஒன்றிய அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய தத்தெடுப்பு வள ஆதார மையம் எனும் அமைப்பின் மூலம் 'இணையத்தில்' பதிவு செய்து மட்டுமே குழந்தைகளைத் தத்து எடுக்க முடியும்.

ஆனால் இதில் பதிவு செய்பவர்களின் ஆவணங்கள் மற்றும் மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை சரி பார்த்து, பதிவு மூப்பின் அடிப்படையில் குழந்தைகளைத் தத்து கொடுக்க எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் 2 முதல் 4 வருடங்கள் ஆகும். இதுவும் கூட பல பேர் குறிப்பாக குழந்தை பெற்றுக் கொள்ள தகுதி இல்லாதவர்கள் மாற்றுவழிகளை நாடிச் செல்ல காரணமாக அமைந்து விடுகின்றது.

4.70 லட்சம் குழந்தைகள் ஆதரவற்றவர்களாக அரசின் காப்பகங்களில் இருக்கும் போது தத்தெடுப்பு நிறுவனங்களில் தத்தெடுப்பதற்குத் தயாராக இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒற்றை இலக்கங்களில் மட்டுமே இருக்கின்றன. நாடு முழுவதும் சட்டப்படி தத்து எடுப்பதற்கு தயாராக இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 2000-திற்கும் குறைவுதான்.

நயன்தாரா விக்னேஷ் சிவன் பிரச்சினையில் அவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே பதிவுத் திருமணம் செய்து கொண்டதாக தற்போது தகவல் வெளியாகி இருக்கின்றது. ஆனால் இருவருக்கும் உடல் ரீதியாக குழந்தை பெற்றுக் கொள்ள என்ன பிரச்சினை இருந்தது என்று உறுதியாகத் தெரியவில்லை.

ஆனால் பெரும்பாலான திரைப் பிரபலங்களோ அல்லது பணக்காரர்களோ வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்வதற்குப் பின்னால் உள்ள முக்கியமான காரணம் தங்களின் அழகு குறைந்து விடக்கூடாது என்பதுதான்.

அவர்கள் எந்த வலியையையும் சுமக்கத் தயாராக இல்லை. பணம் கொடுத்தால் அந்த வலியை சுமக்க, விற்பதற்கு தன்னுடைய உடலைத் தவிர ஏதுமற்ற ஒரு கூட்டம் இங்கே இருக்கின்றது என்ற நம்பிக்கைதான் அவர்களை வாடகைத் தாய் முறையை நோக்கித் தள்ளுகின்றது.

இதில் ஏதாவது முற்போக்கு இருக்கின்றதா என தேடிப் பார்த்தால் பணக்காரத் திமிரும், ஆணவமும் தவிர வேறு ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் அது சம்மந்தமான முழு விவரங்களையும் பொதுவெளியில் வெளியிட்டாலே இதில் தெரிந்துவிடும்.

முதலாளித்துவ உலகில் குழந்தைகளை பெற்றுக் கொள்ள விந்தணுவோ, கருமுட்டையோ, கருப்பையோ எதுவுமோ தேவையில்லை. பணம் பணம் மட்டும் போதும். பணமே குழந்தைகளையும் பிரசவித்து விடுகின்றது.

# 22ஆவது திருத்தத்தை சாத்தியமாக்கிய இரு தரப்பு இணக்கப்பாடு நீடிக்கவேண்டும்

**கலாநிதி ஜெகான் பெரேரா**



அரசியலமைப்புக்கான 22 வது திருத்த நிறைவேற்றம் ஒரு அதிர்ச்சி போன்று வந்தது. முதலில் இந்த திருத்தம் மீதான பாராளுமன்ற விவாதத்தை பின்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டபோது அண்மைய எதிர்காலத்தில் அது மீண்டும் விவாதத்துக்கு எடுக்கப்படாது அல்லது எடுக்கப்பட்டாலும் நிறைவேற்றப்படாது என்றே தோன்றியது.

அரசாங்க உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே இரு சர்ச்சைக்குரிய விடயங்களில் கருத்து வேற்றுகை இருந்தது. கட்சிகளுக்கு இடையில் மாத்திரமல்ல கட்சிகளுககுள்ளும் கருத்துவேறுபாடுகள் நிலவின. முதலாவது சர்ச்சைக்குரிய விடயம் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தில் இரண்டரை வருடங்கள் கடந்த பின்னர் ஜனாதிபதி தனது தற்துணிபு அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை கலைப்பது பற்றியது. இரண்டரை வருட காலத்துக்கு பிறகு பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை புதிய திருத்தத்திலும் நிலைபெறச் செய்தது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு தெளிவான அரசியல் வெற்றியாகும்.

20வது திருத்தமும் தற்போதைய 22 வது திருத்தமும் இரண்டரை வருடங்களுக்கு பிறகு ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தை கலைக்கமுடியும் என்று கூறுகின்றன. இவற்றுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட 19 வது திருத்தம் நான்கரை வருடங்களுக்கு பின்னர் மாத்திரமே பாராளுமன்றத்தை கலைக்க முடியும் என்று ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தியது.ஆனால் 22 வது திருத்தம் இரண்டரை வருடங்களுக்கு பிறகு பாராளுமன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை தொடர்ந்து பேணுகிறது. இதை பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு சதைவாகவே கருதமுடியும்.

பாராளுமன்றத்துக்கு ஐந்து வருட ஆணையை மக்கள் வழங்கியபிறகு விரைவாகவே ஜனாதிபதி அதை கலைப்பது ஒரு நல்ல ஜனநாயக நடைமுறையல்ல. 2004 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தை கலைத்தபோது இதே அடாத்தான ஜனாதிபதியின் அதிகாரத்தின் பிரயோகத்தினால் ஜனாதிபதி விக்கிரமசிங்கவே அன்று பாதிக்கப்பட்டவர். இடைநடுவில் அவரது பிரதமர் பதவி துண்டிக்கப்பட்டது.

இரண்டாவது சர்ச்சைக்குரிய விடயம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாவது பற்றியதும் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல் பதவிகளை வகிப்பது பற்றியதுமாகும். இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு 20 வது திருத்தம் அனுமதி வழங்கியது. ஆனால் 19 வது திருத்தம் அந்த உரிமையை பிரத்தியேகமாக தடுத்தது. இப்போது 22 வது திருத்தமும் அவ்வாறே செய்திருக்கிறது.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் சுமார் பத்துப் பேர் இரட்டைக்குடியுரிமையுடையவர்கள் என்று கூறப்படுகிறது. அந்த வெளிநாடுகளின் குடியுரிமையைக் கைவிடுவதா அல்லது பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறுவதா என்பதை தீர்மானிக்கவேண்டியவர்களாக அவர்கள் இப்போது இருக்கிறார்கள். இது ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பாரிய ஒரு தாக்கமாகும். அதன் தேசிய அமைப்பாளரும் அதிகார மையமுமான பசில் ராஜபக்ச இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர். இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்றத்திற்குள் இருந்தே கிளம்புகிறது. அவர்கள் பதவி விலகாவிட்டால் தகராறை நீதிமன்றத்திலேயே தீர்க்கவேண்டி வரும்.

### எரியும் பிரச்சினைகள்

அரசியலமைப்புக்கான 22 வது திருத்தம் பாராளுமன்றத்தில் 174 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒரேயொரு உறுப்பினரே அதற்கு எதிராக வாக்களித்தார். இதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த ஒரு வெற்றியாக கருதமுடியும். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் அரசின் தடுப்புக்களும் சமப்படுத்தல்களும் முறைமையில் (state's system of checks and balances) குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு உண்மையில் ஏகமனதாக இடம்பெற்றிருக்கின்றன. இது ஆளும் கட்சியின் பழைய தலைவர்கள் அணிக்கும் பலவான்களுக்கும் ஒரு தோல்வியாகும். ஆளும் கட்சி மூன்று அல்லது அதற்கும் கூடுதலான குழுக்களாக சிதைந்துபோய்க்கிடக்கிறது.

ஆளும் கட்சியின் மொத்தம் 134 பாராளுமன்ற உறுப்பினர்களில் 30 க்கும் அதிகமானவர்கள் மாத்திரமே 22 வது திருத்தத்தை எதிர்த்தார்கள். கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்றத்திற்கு வரமுடியாதவாறு செய்யப்பட்டிருக்கிறார். முன்னாள் நிதியமைச்சரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ச வெளிநாட்டு குடியுரிமையை துறக்காவிட்டால் பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்தே கட்சிக்கு வழிகாட்டவேண்டியிருக்கும். சமுதாயத்தின் அடிமட்டத்தில் மக்களை அணிதிரட் டுவதிலேயே அவரின் ஆற்றலும் பலமும் இருப்பதால் அவருக்கு இது ஒரு பாரதூரமான பின்னடைவாக இல்லாமல் இருக்கலாம். பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்து மக்களை அணிதிரட்டமுடியும்.

22வது திருத்த நிறைவேற்றம் ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறிப்பாக நியமனங்களைச் செய்வது தொடர்பான அதிகாரங்களை குறைக்கும். 20 வது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி தான் விரும்பியவர்களை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அரசின் உயர்பதவிகளுக்கும் நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். அந்த அதிகாரத்தை இப்போது ஜனாதிபதி இழக்கிறார்.(இந்த நியமனங்களில் பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான நீதிபதிகள், தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள், தலைவர்கள் நியமனம், பொலிஸ்மா அதிபர் நியமனம் ஆகியவை அடங்குகின்றன).

இந்த அதிகாரங்கள் இப்போது அரசியலமைப்பு பேரவைக்கு மாற்றப்படுகின்றன. அரசியலமைப்பு பேரவை மீது ஜனாதிபதி செல்வாக்கைக் கொண்டிருப்பார், ஆனால் எதேச்சையான அதிகாரமிருக்காது. ஏனென்றால் அந்த பேரவையின் உறுப்பினர்கள் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஜனாதிபதியினால் தெரிவுசெய்யப்படுவார்கள். பேரவைக்கான மூன்று சிவில் சமூக உறுப்பினர்கள் பிரதமரினாலும் எதிர்க்கட்சி தலைவரினாலும் கூட்டாக நியமிக்கப்படுவார்கள். ஆணைக்குழுக்களுக்கு பக்கச்சார்பற்ற உறுப்பினர்கள் நியமனமாவதை இந்த சிவில் சமூக உறுப்பினர்களினால் உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறாக தனது அதிகாரங்களில் சிலவற்றை கைவிடுவதன் மூலமாக ஜனாதிபதி இதுகாலவரை கடுமையாக பிளவுபட்டி ருந்த ஒரு பாராளுமன்றத்தில் எதிர்பார்த்திராத வகையிலான கருத்தொருமிப்பை கொண்டுவந்த ஒரு தலைவர் என்ற நியாயப்பாட்டை பெறுகிறார்.

ஆளும் கட்சி மூன்று அல்லது அதற்கும் கூடுதலான குழுக்களாக சிதறுண்டு போனமை நாடு எதிர்நோக்குகின்ற பாரதூரமான பிரச்சினைகளை கையாளுவதற்கு கருத்தொருமிப்பின் அடிப்படையிலான அணுகுமுறையை வகுப்பதில் தொலைநோக்கும் துணிவாற்றலும் கொண்ட ஒரு தலைவராக மகத்தான பாத்திரத்தை ஜனாதிபதி வகிக்க வசதியாயமையும் எனலாம். இந்த பிரச்சினைகளில் கடந்த இரு வருடங்களில் பாரதூரமான பரிமாணங்களை எடுத்த பொருளாதார நெருக்கடி, நீண்டகால ஊழல் மற்றும் தவறான நிருவாகம் ஆகியவை அடங்கும்.

பொருளாதார மறுசீரமைப்பு பல மட்டங்களில் மக்கள் மீது பாரிய சுமைகளை ஏற்றப்போகின்ற ஒன்றாக அமையும். அந்த மறுசீரமைப்பை ஒரு இருதரப்பு இணக்கப்பாட்டு அணுகுமுறையூடாக கையாளுவது சிறந்ததாக இருக்கும். நீண்டகால தேசிய இனப்பிரச்சினையையும் இதே அணுகுமுறையில் கையாளுவது நல்லது. 1956 தொடக்கம் அரசியல் தீர்வொன்றைக் காணமுடியாமல் இருக்கும் இனப்பிரச்சினை உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் அடங்கிப்போன ஒரு எரிமலை போன்று தோன்றுகிறது. ஆனால் யதார்த்தநிலை அதுவல்ல.

### மானசீகமான அணுகுமுறை

கருத்தொருமிப்பு அரசாங்கத்தை நீடிப்பதற்கு சொல்லும் செயலும் ஒன்றாயமைவதுடன் மானசீக மான அக்கறையை வெளிக்காட்ட வேண்டியதும் அவசியமாகும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இதைச் சுட்டிக்காட்டினார். அரசியலமைப்பு திருத்தங்கள் நன்னோக்குடன் கொண்டு வரப்படவேண்டும் என்று அவர் சொன்னார். அரசியலமைப்பு பேரவைக்கான சிவில் சமூக உறுப்பினர்களை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலமாக தெரிவு செய்யும்போது அந்து மூவரையும் அரசாங்கமே நியமித்துவிடக்கூடிய சாத்தியம் இருக்கும் என்பதால் அந்த உறுப்பினர்களை பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் கூட்டாக நியமிக்கக்கூடியதாக ஏற்பாடு வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச விடுத்த வேண்டுகோளை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச ஏற்றுக்கொண்டார். அவரின் இந்த செயலில் பரஸ்பர விட்டுக்கொடுப்பு உணர்வு வெளிப்பட்டது. ஆனால் இரு விடயங்களில் அந்த கருத்தொருமிப்பு விரைவாக முறிவடையக்கூடும். அதில் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயற்பட வேண்டியது அவசியம்.

பொருளாதாாரம் வீழ்ச்சியடைந்து போராட்ட இயக்கம் எழுச்சிபெற்றதை அடுத்து புதிய தேர்தல்களுக்கான தேவை குறித்து சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டது. இவ்வருடம் மார்ச்சில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியவையாக இருந்தன. ஒத்திவைப்பு இன்றி உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூட்டாக இணங்கின. ஏனென்றால், உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஏற்கெனவே ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டு விட்டது.

முரண்பாடு தோன்றக்கூடிய இரண்டாவது விடயம் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த ஆட்சி முறையின் தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழலுக்கு எதிராக அமைதிவழியில் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுவதாகும். ஊழலும் தவறான முகாமைத்துவமும் இல்லாத சமுதாயம் ஒன்றை வேண்டிநிற்பவர்கள் கைதுசெய்யப்பட்டு கொடூரமாக தண்டிக்கப்படுகின்ற அதேவேளை, அவற்றுக்கு பொறுப்பானவர்கள் பாராளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் உயர்பதவிகளில் தொடருகிறார்கள்.

22 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து சகல சுயாதீன ஆணைக்குழுக்களும் செயலிழக்கும் என்று நீதியமைச்சர் விஜேத்ச ராஜபக்ச அபிப்பிராயம் வெளியிட்டார். குறிப்பாக இரு ஆணைக்குழுக்கள் சிறப்பாக செயற்பட்டதாக கூறிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அந்த இரண்டும் தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அந்த இரு ஆணைக்குழுக்களும் சிவில் சமூகத்தினால் உன்னிப்பாக நோக்கப்படும்.

ஒத்திவைப்பு இன்றி உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த முடியும் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கும் தேர்தல் ஆணைக்குழுவும் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமைக்காக உறுதியாக குரல் கொடுத்துவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுமே அந்த இரு ஆணைக்குழுக்களுமாகும். மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு அரச நிறுவனமாக இருக்கின்ற போதிலும் இவ்வாறாக ஜனநாயக உரிமைகளுக்காக உறுதியாக குரல் கொடுப்பது பெருமிதப்படக் கூடியதாகும்.


ஆட்சியதிகாரத்துக்கு உண்மையை எடுத்துரைப்பவர்கள் அரசு என்ற கப்பலை பாதுகாப்பான துறைமுகம் நோக்கி கொண்டுசெல்பவர்கள் என்பதால் துரோகத்தனமான அரசியல் போக்குகளில் இருந்து அவர்கள் ஆட்சி நிபுணத்துவமும் அரசியல் விவேகமும் கொண்ட தலைமைத்துவத்தினால் காப்பாற்றப்படவேண்டும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ...........  ii) 18, 15, 12, ............., ...........

21) பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

| 3, 9, 14, 6, 10, 12, |
|---|

..........................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............. | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............. | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............. | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745  **23.** 455
**24.** 1l 100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**19.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**19.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஓய்வூதியர்களுக்கு அநீதி பட்ஜெட்டில் தீர்வு வழங்குக

## ஜனாதிபதிக்கு கோரிக்கை கடிதம்

நிந்தவூர், ஒக். 26

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 2016- 2019 காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய அதிகரிப்புக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டுமென ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உப தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ. எல். முகம்மட் முக்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்

அரசாங்க சேவை ஊடாக நாட்டுக்கும் மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி ஓய்வுபெற்ற அரச ஊழியர்களில், 2016ஆம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கம், தனது முதலாவது அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் பெரும் அநீதியிழைத்தது.

இவர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை தற்காலிகமெனும் போர்வையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் இப்பிரச்னை இன்று வரை தீர்வின்றி தொடர்கிறது. இது அடிப்படை உரிமை மீறலாகும். இதன் மூலம் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கிற்கான பதில் மனுவை சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த 3 வருடகாலமாக நீதிமன்றத்துக்கு வழங்க முடியாத நிலையில் கால இழுத்தடிப்பை செய்து வருகிறது.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் அவரின் ஆலோசகர்கள், நிதிய மைச்சு செயலாளர் மற்றும் திறைசேரி அதிகாரிகளுடன் எமது சங்கம் பல சுற்றுப் பேச்சு நடத்தியுள்ளது. இதன்போது ஓய்வூதிய அதிகரிப்பை வழங்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இறுதிப் பேச்சின்போது 4 கட்டங்களில் ஓய்வூதிய அதிகரிப்பை செயல்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது.

எனவே, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தில் இதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்து, எமது நீண்ட கால பிரச்னைக்கு தீர்வை வழங்க உதவுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுள்ளோம்- என்றார். (ஐ-06)

# திருக்கோணேஸ்வரர் ஆலயச் சூழலை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துக!

## காரைதீவு பிரதேச சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்

அம்பாறை, ஒக். 26

"வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை பௌத்த மயமாக்கும் சதித்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன .ஆகவே உடனே அதை தடுத்து நிறுத்தி இந்த பிரதேசத்தை புனித பிரதேசமாக மாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்."

-இவ்வாறு காரைதீவு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் விசேட அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றபோது ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த பிரேரணையை சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்மொழிந்து உரையாற்றினார்.

அவர் உரையாற்றுகையில்-

இலங்கையின் மிக தொன்மை வாய்ந்த பாடல் பெற்ற தலமாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேஷ்வரர் ஆலயம் சைவத் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று நிலம்.

அந்த ஆலயம் சூழ்ந்த இடங்களில் சட்டவிரோதமாக கடைகள் அமைக்கப்பட்டும்,

தொல்லியல் திணைக்களத்தினால் சில தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்க பட்டுவருவதும் ஒட்டுமொத்த இந்துக்களின் மனங்களை வேதனை அடையவைத்திருக்கின்றது.

தொல்பொருள் திணைக்களம் ஒரு ஆலய விடயத்திற்குள் தலையிடுகின்றது என்றால், நிச்சயம் அங்கு ஒரு இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தை நோக்கினால், திருகோணேஸ்வர ஆலயத்தை உள்ளடக்கிய வாறு, உல்லாசத்துறை அபிவிருத்தியென்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் கோணேசர் ஆலயத்தை விழுங்கும் ஒரு செயற்பாடுதான்.

ஏனெனில் உல்லாசத்துறை அபிவிருத்தியை செய்வதற்கு பல்வேறு இடங்கள் இருக்கின்ற போது, குறிப்பாக கோணேசர் ஆலயப்பகுதியை தெரிவுசெய்ய வேண்டிய அவசியமென்ன?

எனவே அங்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

கோணேசர் கோயிலில் திட்டமிட்டு நிறுவப்படும் பௌத்த மயமாக்கல் சிங்கள குடியேற்றங்கள் என்பனவற்றை தடுத்து ஆலய வளாகத்தை சூழ உள்ள பிரதேசங்களை புனித பிரதேசமாக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

பிரேரணையை சபை உறுப்பினர் த.மோகனதாஸ் வழிமொழிந்தார்.

பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக உரையாற்றி வாக்களித்தனர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி ,பிரதமர், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தவிசாளர் கூறினார். (அ)

# பொத்துவில் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத் தொகுதிகள் கையளிப்பு!

அம்பாறை, ஒக். 26



அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப்பின் வழிகாட்டலில் பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது குடிதண்ணீர் விநியோகத் தொகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செங்காமம் மற்றும் ஹிதாயாபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட தலா 50 ஆயிரம் லீற்றர் கொண்ட இந்த இரு குடிதண்ணீர் விநியோகத் தொகுதிகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் .முஷாரப்பின் வழிகாட்டலின் கீழ், குவைத் நாட்டின் அல்-நஜாத் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியில், அந்நூர் நலன்புரிச் சங்கத்-தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம் நேற்று முன் தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

குவைத் அல் நஜாத் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சமீஹ் ஷாகிர் அப்துல் அஸீஸ், செயற்றிட்ட முகாமையாளரான பொறியியலாளர் பஹத் இஹாப் முஹம்மத் அல்-தப்பூஸ், அந்நூர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.எம் அலியார், பணிப்பாளர் டாக்டர் ரிப்கி ரம்சான், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எச் அப்துர் ரஹீம், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல்.நியாஸ், பிரதேச சபையின் உறுப்பினர்கள், திட்ட அமுலாக்கல் குழு அங்கத்தவர்கள், பொதுமக்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(அ)

# வயோதிப பெண்ணொருவர் கல்குடா பகுதியில் கொலை!

மட்டக்களப்பு, ஒக். 26

மட்டக்களப்பு-கல்குடா, பட்டியடிச்சேனை பகுதியில் வயோதிப பெண்ணொருவர் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் மகன் மற்றும் தமக்கையின் மகன் ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் பகல் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின்போது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மீதான பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை வாழைச்சேனை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்குடா பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இஸ்லாம் பாடநூல் வழங்கப்படாமை; முஸ்லிம் அரசியல் கட்சிகள் மௌனம்

## நீதிக்கான மய்யம் குற்றச்சாட்டு

இஸ்லாம் பாட புத்தகம் வழங்கப்படாமை தொடர்பில் முஸ்லிம் மாணவர்களின் சமத்துவ உரிமை மத சுதந்திரத்தை மீறுவதாக அமைந்துள்ளது என நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷூஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள நீதிக்கான மய்யத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் பாட புத்தகம் வழங்கப்படாமையினால் பாடசாலை மாணவர்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிக்கான மய்யம் மனித உரிமை ஆணைக்குழு கொழும்பு தலைமையகத்தில் முறைப்பாடொன்றினைச் செய்துள்ளது. குறித்த இச்செயற்பாடு இடம்பெற்று இதுவரை சுமார் பத்து மாதங்கள் கடந்தும் ஆணையாளர் வாக்குறுதி அளித்ததற்கிணங்க புதிய இஸ்லாம் பாட புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இன்னும் சில மாதங்களில் நடைபெறப்போகும் சாதாரண தரப் பரீட்சை எழுதுவதிலும் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பணிப்புரைக்கு அமைய 06, 07,10,11 ஆகிய தரங்களுக்கான இஸ்லாம் பாட புத்தங்கங்கள் விநியோகம் நிறுத்தப்பட்டதோடு ஏற்கனவே மாணவர்கள் கற்றுக்கொண்டிருந்த குறித்த தரங்களுக்கான புத்தகங்களும் மாணவர்களிடம் இருந்து மீளப்பெறப்பட்டன.

திருத்தங்களின் பின்னர் மீண்டும் மாணவர்களுக்கு வழங்குவதாக தெரிவித்திருந்தும் இன்னும் இழுத்தடிப்பு செய்வது சாதாரண தர மாணவர்களை நேரடியாக பாதித்துள்ளது .

குறித்த தரங்களுக்கான இஸ்லாம் பாட புத்தக பதிப்பாசிரியர் குழு, எழுத்தாளர்கள் குழு, கண்காணிப்பு குழு என எந்தவொரு குழுவிடமும் எந்த அறிவிப்போ, கருத்துக்களோ, ஆலோசனையோ பெறப்படாமல் திடீரென இப்பணிப்புரை கல்வி வெளியீட்டு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளது. வேறு நோக்கங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட இப்பணிப்புரையானது சட்ட விரோதமானது. இவ்விடயமானது முஸ்லிம் மாணவர்களின் சமத்துவ உரிமை, மத சுதந்திரத்தை மீறுவதாக அமைந்துள்ளது. மேலும் மேற்படி முறைப்பாட்டில் நீதிக்கான மய்யம் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையினை மீளப்பெற ஆலோசனை வழங்குமாறும் புத்தகங்களை உடனடியாக மீள விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமை ஆணையகத்திடம் கோரியுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு



# முக்கிய இன கிளர்ச்சிக் குழுமீது மியன்மார் இராணுவம் தாக்குதல்

### 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு! 100பேர் காயம்!!



நைபிட்டோ, ஒக். 26

கச்சின் சுதந்திர இராணுவம் என அறியப்படும் முக்கிய இன கிளர்ச்சிக் குழு நடத்திய கொண்டாட்ட நிகழ்வின் மீது மியன்மார் இராணுவம் நடத்திய வான் வழித் தாக்குதல்களில் கச்சின் சுதந்திர இராணுவ உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந் துள்ளனர் மற்றும் 100 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 8:40 மணிக்கு கச்சின் சுதந்திர அமைப்பின் ஸ்தாபகத் தின் மூன்று நாட்கள் கொண்டாட் டத்தின் முதல் நாளில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமைப்பின் ஆயுதப் பிரிவான கச்சின் சுதந்திர இராணுவ உறுப்பினர்கள் இராணுவப் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தளத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இரண்டு மியன்மார் இராணுவ ஜெட் விமானங்கள் இந்த தாக்குதலை நடத்தியதாகவும், கொண்டாட்டத்தின் மீது இராணுவ விமானம் நான்கு குண்டுகளை வீசியதாகவும் அங்கு இருந்த ஆயுத குழுவைச் சேர்ந்தவர்கள் கூறியதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வில் 300 முதல் 500பேர் வரை கலந்து கொண்டனர், இறந்தவர்களில் ஒரு கச்சின் பாடகர் மற்றும் கீபோர்ட் பிளேயர் ஆகியோர் அடங்குவர். (அ)

# கெர்சனுக்குள் துருப்புகளை மேலும் அனுப்புகிறது ரஷ்யா



### உக்ரைன் உளவுத்துறை தலைவர் எச்சரிக்கை

கீவ், ஒக். 26

முக்கிய தெற்கு நகரமான கெர்சனுக்குள் ரஷ்யா மேலும் துருப்புக்களை அனுப்புவதாக உக்ரைனின் உளவுத்துறைத் தலைவர் கைரிலோ புடானோவ் எச்சரித்துள்ளார்.

சில ரஷ்ய பிரிவுகள் வெளியேறக்கூடும் என்று உக்ரைன் முன்பு கூறியிருந்த நிலையில், தற்போது கெர்சனை பாதுகாக்க தயாராகி இருக்கலாம் என்று புடானோவ் கூறியுள்ளார்.

அத்துடன், ரஷ்ய எல்லாவற்றையும் இழந்துவிட்டதாக மாயையை உருவாக்க முயற்சிக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

போரின் ஆரம்ப நாட்களில் ரஷ்யா கெர்சனைக் கைப்பற்றியது, ஆனால் சமீபத்தில் உக்ரைனிய துருப்புக்கள் டினிப்ரோ ஆற்றின் வழியாக முன்னேறும்போது ரஷ்ய துருப்புகள் அழுத்தத்திற்கு உள்ளாகின. இதனால், நகரில் உள்ள ரஷ்ய அதிகாரிகள் ஆயிரக்கணக்கான பொதுமக்களை வெளியேற்ற உத்தரவிட்டுள்ளனர்.

இதனிடையே, அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் உக்ரைனில் உள்ள இரண்டு தளங்களை ஆய்வு செய்ய ஒரு குழுவை அனுப்புவதாக ஐ.நாவின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# ஸ்திரத்தன்மை-ஒற்றுமைக்கு புதிய பிரதமர் சுனக் அழைப்பு!

லண்டன், ஒக். 26

ரிஷி சுனக் அடுத்த பிரதமர் பதவிக்கான போட் டியில் வெற்றி பெற்ற பிறகு ஸ்திரத் தன்மை மற்றும் ஒற்றுமைக்கு அழைப்பு விடுத் துள்ளார்.

போட்டியாளரான பென்னி மோர்டான்ட் பாரளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து போதுமான ஆதரவைப் பெறத் தவறியதால் ரிஷி சுனக், கன்சர்வேட்டிவ் தலைமைப் போட்டியில் வென்றார்.

இந்தநிலையில் அவர் தனது முதல் உரையில், தனது கட்சியையும் பிரித்தானியாவையும் ஒன்றாகக் கொண்டுவருவது தனது முக்கிய முன்னுரிமை என்று கூறினார். (அ)

# அமெரிக்கப் பாடசாலையில் ஆயுததாரி துப்பாக்கிச் சூடு!

### சந்தேக நபர் உட்பட மூவர் உயிரிழப்பு



நியூயோர்க், ஒக். 26

அமெரிக்காவின் மிசோரியில் உள்ள செயின்ட் லூயிஸில் உள்ள உயர்நிலைப் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், சந்தேக நபர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர் மற்றும் ஏழு பேர் காயமடைந்தனர்.

நேற்று முன் தினம் திங்கட் கிழமை உள்ளூர் நேரப்படி 09:00 மணிக்கு சென்ட்ரல் விஷூவல் அண்ட் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் உயர்நிலைப் பாடசாலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

பாடசாலைக் கட்டடத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்த நிலையில், சந்தேக நபர் எப்படி உள்ளே நுழைந்தார் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

துப்பாக்கிதாரியின் ஆயுதம், தாக்குதலின் இடைநடுவே செயலிழந்ததால், பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக சாட்சிகள் கூறுகின்றனர்.

தாக்குதல்தாரி 19 வயதுடைய முன்னாள் மாணவர் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், பொலிஸாருடன் துப்பாக்கிச் சூடு நடத்தி, பொலிஸாரின் பதில் தாக்குதலால் காயமடைந்த பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுமார் 400 மாணவர்களைக் கொண்ட பாடசாலையில் அவர் நடத்திய தாக்குதலுக்கான நோக்கம் தெளிவாக இல்லை.

ஒரு பதின்ம வயது பெண் பாடசாலைக்குள் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது, ஒரு பெண் மருத்துவமனையில் இறந்தார் என்று பொலிஸார் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

காயமடைந்த ஏழு பேரில் மூன்று பெண்கள் மற்றும் நான்கு சிறுவர்கள் அடங்குவதாகவும், எவருக்கும் உயிருக்கு ஆபத்தான காயங்கள் இல்லை என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# வட்ஸ்அப் செயலிழப்பு

வட்ஸ்அப் சமூக ஊடக வலையமைப்பில் செயலிழப்பு ஏற்பட்டுள்ளதாக நேற்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் வட்ஸ்அப் பயன்படுத்துபவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இதன் காரணமாக பயனர்களால் செய்திகளை அனுப்பவோ பெறவோ முடியவில்லை.

எனினும் இதற்கான காரணம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (அ)





# கொரிய விமானம் தரையிறங்கும்போது ஓடுபாதையை விட்டு விலகி அனர்த்தம்!

மணிலா, ஒக். 26

பிலிப்பைன்ஸ் நாட்டின் செபு நகரில் தரையிறங்கிய கொரிய நாட்டு பயணிகள் விமானம் ஓடுபாதையை விட்டு விலகி புல்தரையில் இறங்கி விபத்துக்குள்ளானது.

விமானத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்தபோதும் அதில் பயணித்த 173 பேரும் எவ்வித காயங்களுமின்றி பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். மோசமான வானிலையால் விமானத்தை தரையிறக்கும் முயற்சி 2 முறை தோல்வியடைந்த நிலையில், மூன்றாவது முறை தரையிறக்கப்பட்டபோது ஓடுபாதையைத் தாண்டி விபத்துக்குள்ளானது. (அ)

# இஸ்ரேலிய படைகள் தாக்குதல் 6 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு!

### 21பேர் காயம்!!



ஜெருசலேம், ஒக். 26

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பல பகுதிகளில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஆறு பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் மற்றும் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலையில், ஏராளமான இஸ்ரேலியப் படைகள் நாப்லஸ் நகரைத் தாக்கியதாக பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீன அதிகார சபையின் தலைமையகமான ரமல்லா நகருக்கு அருகிலுள்ள நபி சலே கிராமத்தில் இஸ்ரேலியப் படைகளுடனான மோதலின்போது மற்றொரு பலஸ்தீனிய இளைஞரான குசே அல்-தமிமி உயிரிழந்ததாக அமைச்சகம் பின்னர் தெரிவித்தது. (அ)

# தென்னாபிரிக்க அணியை மீண்டும் சோதித்தது மழை!

மெல்பர்ன், ஒக். 26

தென்னாபிரிக்கா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையே நேற்று முன்தினம் நடந்த போட்டி மழையால் கைவிடப்பட்டது.

இதனால், இருபது -20 உலகக்கிண்ணத் தொடரில் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

மழை காரணமாக இப்போட்டி தாமதமாகவே தொடங்கியது. மேலும் போட்டி தலா 9 ஓவர்களாக குறைக்கப்பட்டு விளையாடப்பட்டது. சிம்பாப்வே சார்பில் மதவீர் மட்டும் நின்று அதிரடியாக ஆடினார். அவர், 18 பந்து களில் 35 ஓட்டஙகள் எடுத்தார். இதனால் அந்த அணி 9 ஓவர்களில் 79 ஓட்டங்களை எடுத்திருந்தது.

9 ஓவர்களுக்கு 80 ஓட்டங்கள் இலக்கை நோக்கி இறங்கிய தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடும் போது, மீண்டும் மழை குறுக்கிடும் வாய்ப்பை உணர்ந்த அந்த அணியின் தொடக்க வீரர்கள் அதிரடியாக அடித்தாடினர். சத் தாரா வீசிய முதல் ஓவரில் மட்டும் டி கொக் 23 ஓட்டங்களை குவித்தார். எதிர்பார்த்தபடி மழை மீண்டும் பெய்ய டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அணி 7 ஓவர்களில் 64 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என புதிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஏற்கனவே, முதல் ஓவரில் 23 ஓட்டங்கள் எடுத்திருந்தால், வெற்றி தென்னாபிரிக்கா பக்கமே இருந்தது. 3 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டு, இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.




போட்டியில் முடிவை எட்டுவதற்கு இரு அணிகளும் குறைந்தபட்சமாக 5 ஓவர்களையாவது ஆடியிருக்க வேண்டும் என்ற விதியின் அடிப்படையில் போட்டியில் ஒரு முடிவை எட்ட முடியவில்லை என்று ஐ. சி. சி. அறிவித்தது.

உலகக் கிண்ணங்களில் தென்னாபிரிக்கா அணி மழையால் பாதிக்கப்படுவது இது முதன் முறை கிடையாது. 1992 உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியை அதற்கு உதாரணமாக சொல்லலாம். இப்போது இந்த போட்டியும் மழையால் தென்னாபிரிக்க அணிக்கு சோகமாக முடிந்துள்ளது.



# அஸ்வினின் அறிவை புகழ்ந்த விராட் கோலி!

மெல்பர்ன், ஒக். 26

நடப்பு இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக கடைசி பந்தில் வெற்றிக்கான ஓட்டத்தை எடுத்துக் கொடுத்தார் இந்திய வீரர் அஸ்வின். அவரின் துடுப்பாட்ட அறிவாற்றலை மனதார போற்றி உள்ளார் மற்றோர் இந்திய வீரரான விராட் கோலி. அந்தப் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றிருந்தது.

மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற அந்தப் போட்டியில் கடைசி ஓவரில் இந்திய அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரில் இரண்டு விக்கெட்களை இழந்தது இந்தியா. கடைசி பந்தில் வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்டது. களத்தில் அஸ்வின் இருந்தார். ஆனால், அந்தப் பந்து அகலப்பந்தாக வீசப்பட்டது. ஓர் ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இந்தியா இருந்தது. யாருமே எதிர்பார்க்காத வகையில் லோங்க்-ஒவ் திசையில் பந்தை விரட்டி வெற்றிக்கான ஓட்டத்தை எடுத்தார் அஸ்வின்.

“பந்தை கவர் திசையில் அடிக்குமாறு நான் அஸ்வினிடம் தெரிவித்தேன். ஆனால், அவரோ தனக்கு இருக்கும் அபார கிரிக்கெட் ஞானத்தை பயன்படுத்தினார். அதை செய்ய அவருக்கு ஒருவிதமான துணிச்சலும் தேவை. பந்து கிரீஸிக்குள் வந்தது. அதனை அவர் அகலப்பந்தாக மாற்றினார்” என கோலி பாராட்டியிருந்தார். ஆட்டம் முடிந்த பிறகு அவர் இதை சொல்லி இருந்தார்.

இந்தப் போட்டியில் கோலி 53 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 6 பௌண்ட்ரி மற்றும் 4 சிக்ஸர்கள் அவரின் இனிங்ஸில் அடங்கும். அவரின் அபார ஆட்டம் இந்திய அணிக்கு வெற்றியை வசமாக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நான் ஓய்வு பெறவில்லை மீண்டும் களம் வருவேன்!



சான் பிரான்சிஸ்கோ, ஒக். 26


தான் இன்னும் ரென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறவில்லை எனவும், அதோடு களத்துக்கு திரும்ப அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

இதனை சான் பிரான்சிஸ்கோவில் நடந்த நிகழ்வில் பங்கேற்றபோது அவர் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க நாட்டை சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், மகளிர் ஒற்றையர் பிரிவில் 23 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். மகளிர் இரட்டையர் பிரிவில் 14 முறை கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். அதோடு கலப்பு இரட்டையர் பிரிவில் இரண்டு கிராண்ட்ஸ்லம் பட்டங்களையும் அவர் வென்றுள்ளார்.

கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றில் தோல்வியை தழுவியிருந்தார். அதுதான் அவரின் கடைசி தொடர் என நம்பப்பட்டது. அதன் காரணமாக ஒவ்வொரு போட்டியிலும் அவருக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. அவரும் கண்ணீருடன் தொடரில் இருந்து வெளியேறினார். அவர் ஓய்வு குறித்த தகவல் ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தாலும் அதுதான் தனது கடைசி தொடர் என செரீனா சொல்லவில்லை. இந்தச் சூழலிலேயே அவர் இப்படி தெரிவித்துள்ளார்.

“நான் இன்னும் ஓய்வு பெறவில்லை. நான் களத்துக்குத் திரும்பும் வாய்ப்புகள் மிக மிக அதிகம். எனது வீட்டில் ரென்னிஸ் கோர்ட் உள்ளது. நான் ஓய்வு குறித்து இதுவரை எந்த எண்ணமும் கொண்டிருக்கவில்லை” என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# குவாடலஜாரா தொடர் ஜெசிகா சம்பியன்

மெக்சிகோ சிற்றி, ஒக். 26

உலக ரென்னிஸ் சங்கத்தின் குவாடலஜாரா போட்டியில் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலா சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

மெக்சிகோவில், பெண்களுக்கான உலக ரென்னிஸ் சங்கம் குவாடலஜாரா ஓப்பன் டென்னிஸ் தொடர் நடத்தியது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதியில் உலகின் மூன்றாம் நிலையிலுள்ள அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, 5ஆவது இடத்தில் உள்ள கிரீஸின் மரியா சக்காரி மோதினர்.

முதல் செற்றை 6-2 எனக் கைப்பற்றிய பெகுலா, இரண்டாவது செற்றை 6-3 என தன்வசப்படுத்தினார்.

ஒரு மணி நேரம், 10 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஜெசிகா பெகுலா 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இது ஜெசிகாவின் இரண்டாவது பட்டமாகும். (ஐ)

# ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக். 26

பொகவந்தலாவை நகருக்கு அருகாமையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொகவந்தலாவை நகருக்கு அருகாமையில் உள்ள கெசல்கமுவ ஓயாவில் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் ஒன்று ஆற்றில் மிதப்பதனை கண்டு நபர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டது.

சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 07 - 1951

மறைவு 22 - 10 - 2022

## ரகுநாத் கோவிந்தபிள்ளை

(முன்னாள் உரிமையாளர் கபே பாரத் - பிரான்ஸ்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் சேர் ஜி (Cergy) நகரை வசிப்பிடமாகவும் கொண்ட ரகுநாத் கோவிந்தபிள்ளை அவர்கள் 22.10.2022 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரம்பிள்ளை- ஞானசௌந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரகுமாரி(பவா) அவர்களின் அன்புக் கணவரும் ராஜன், ரெமி, சூட்டா, காயத்திரி(டொலி), துர்க்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாத், ஜெகநாத், புஸ்பநாத், ஜோதிநாத், கானவதி, கோபிநாத், கீதவதி, சந்திரநாத், காலஞ்சென்ற குணவதி (அம்மாச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனோமிலா, இந்திரன், திபாகரன், சுரேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஷ்கா, ஆருஷன், கெவின், மெலினா, ஓவியா, அஸ்வின், ஜெசிக்கா, நிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**இறுதிக்கிரியைகள், அஞ்சலி, தகனம் நடைபெறும் இடம்**
Crématorium des Joncherolles - Villetaneuse, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**இறுதிக்கிரியை:** 26.10.2022 புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 11.45 மணி வரை

**இறுதி அஞ்சலி:** 26.10.2022 புதன்கிழமை காலை 11.45 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

**தகனம்:** பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
இந்திரன் - 00 33612804478 - பிரான்ஸ்
திபாகரன் - 00 33695318127 - பிரான்ஸ்
ஜெகநாத் - 0033698751011 - பிரான்ஸ்
ராஜன் - 00447813183723 - லண்டன்
கோபிநாத் - 00447788133916 - லண்டன்
யோகநாத் - 0016474611956 - கனடா
கானா - 0015195000487 - கனடா
கண்ணா - 0015197160463 - கனடா

# ராஜபக்ஷ முகாம் மீண்டும் ஆட்சி அமைக்க முடியாது!

## அநுரகுமார கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 26

**நாட்டை பல தசாப்தங்களாக ஆட்சி செய்து கொண்டிருந்த ராஜபக்சர்கள் தற்போது காணாமல் போயுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மீண்டுமொரு ராஜபக்ஷ முகாம் நாட்டில் ஆட்சியமைக்க முடியாதளவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிதறிப் போயுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகளைக் கண்காணிப்பதற்கு ஜே.வி.பியிலிருந்து ஓரிருவரை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்தால் போதும் என்று மக்கள் எண்ணினர்.

ஆனால் இன்று ஆட்சியை ஜே.வி.பி.யிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இதனைக் கூறும் மக்கள் நினைத்தால் எம்மால் தேர்தலில் வெற்றி பெற முடியும்- என்றார். (அ)

# பாடசாலைகளில் இடை விலகும் மாணவர் எண்ணிக்கை வடக்கில் சடுதியாக உயர்வு

## பொருளாதார நெருக்கடியும் காரணம் என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக். 26

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

2020ஆம் ஆண்டு 485 ஆகவும், 2021ஆம் ஆண்டு ஆயிரத்து 105 ஆகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 519 ஆகவும் இடைவிலகிய மாணவர்கள் எண்ணிக்கை உள்ளது என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திடம் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆகக்கூடுதலாக மடுக்கல்வி வலயத்தில் 94 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 72 பேரும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 52 பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 51 பேரும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 48 பேரும் இடைவிலகியுள்ளனர்.

அதிகளவில் ஆண்களே இடைவிலகியுள்ளதுடன் 10ஆம் மற்றும் 11ஆம் தரங்களைச் சேர்ந்தவர்களே இதில் அதிகமாகவும் உள்ளனர்.

2021ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலாக கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 181 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 148 பேரும், மன்னார் கல்வி வலயத்திலிருந்து 135 பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திலிருந்து 119பேரும் இடைவிலகியுள்ளனர்.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் வடக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலாக வலிகாமம் கல்வி வலயத்தில் 123 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 110பேரும், மன்னார் கல்வி வலயத்தில் 101பேரும் இடைவிலகியுள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னரான அதிகரித்த இடைவிலகல்களுக்கான காரணம் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரிடம் கேட்டபோது,

"வறுமையும் இதற்குப் பிரதான காரணம். அதனைவிட கொரோனா காலத்தில் பாடசாலைகளுடன் தொடர்பில்லாது நீண்ட காலம் இருந்தமையால் மாணவர்கள் தொழில்களை நாடிச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சில பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு திருமணமும் செய்து வைத்துள்ளனர்" - என்று குறிப்பிட்டார். (அ)

# இலங்கை தோல்வியடைய இன, மத வெறியே காரணம்

## முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஒக். 26

இனவாதமும் மதவாதமும் இலங்கைத் திருநாட்டைத் தோல்வியடைய வைத்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

'இன, மத வாதங்களால் வெற்றிபெற்ற ஆட்சியாளர்களும் தோற்கடிக்கப்பட்ட இலங்கைத் திருநாடும்' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அடிப்படை வாதங்களான இனவாதம், மதவாதம், நிறவாதம், குலவாதம், பிரதேச வாதம் என்பன பல்லின மக்களின் தேசிய ஒற்றுமைக்கு சவால்களாக அமைகின்றன.

அந்தவகையில் இலங்கையில் இனவாதம், மதவாதம் என்பவை கூர்மையான பிரிவினை ஆயுதங்களாக மாறி பல்லின மக்களின் தேசிய ஒற்றுமையைப் பிளவுபடுத்தி வந்துள்ளது.

அந்த வகையில் சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள இன, பௌத்தமத அடிப்படை வாதத்தினை அரசியல் முதலீடாகப் பிரயோகித்து தேர்தலில் வெற்றிகளைக் குவித்து வந்துள்ளனர்.

தேசிய ஐக்கியம், தேசிய பொருளாதாரம், ஒற்றையாட்சி முறை, பல்லின மத இணக்கப்பாடு, புத்திஜீவிகளின் பங்களிப்பு, செயற்பாடு குறைந்த கோட்பாட்டுக் கல்வி முறை, தொழில் வாய்ப்பு, புலம் பெயர்ந்த மக்களின் பங்களிப்பு, அரசியல் கட்சிகளின் அர்ப்பணிப்பு, தேசிய வளப் பயன்பாடு போன்ற அனைத்தும் தோல்வியடைந்ததால் நாடு தோற்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது." - என்றுள்ளது. (அ)

## இனப்...

மூலம் இனப்பிரச்னைக்கு முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலைத் திட்டம் உடனடியாக நடைபெறவேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்றபோது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு சேர்ந்து செயல்பட்டோம் என்பதை அவர் அறிவார். 2016 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து பாராளுமன்றம் அரசமைப்பு பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புக்காக வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது.

அந்த வழிகாட்டல் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம். புதிய அரசமைப்பு தொடர்பான இரண்டு இடைக்கால அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடு நிபுணர் குழுவால் வரையப்பட்ட ஒரு முழுமையான அரசமைப்பு வரைவுகூட அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வந்து ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக முன்நின்ற சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் அறிக்கையிலே அந்த முயற்சியில் தொடர்ந்து செயல்பட்டு முடிவை எட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

2016 ஆம் ஆண்டு அரசமைப்பு பேரவையாக உருவாக்கப்பட்டு பலவித கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மக்கள் சந்திப்புகள் செய்யப்பட்டு மாகாண சபைகளுடைய பிரதிநிதித்துவத்தையும் பெற்று விசேடமாக தென்பகுதியிலுள்ள ஏழு மாகாண சபைகளை உள்ளடக்கி வேலை செய்யப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து முன் செல்ல ஜனாதிபதி ஆவண செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த வேலை செய்யப்பட்டது. இதனை வெகு விரைவாகத் தொடர்ந்து முன்னெடுத்தால் ஒரு வருட காலத்துக்குள் இதனை முடிவுக்குக் கொண்டு வரலாம். ஒரு வருடம்கூடத் தேவை இல்லை. அனைவருடைய இணக்கப்பாட்டோடு சகல மக்களுடைய ஆதரவோடு புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கின்ற நேரத்தில் இதற்கு முன்னர் பங்களித்ததைப் போலவே முழுமையான பங்களிப்பைக் கொடுப்போம்.

இதேவேளை, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் 8 தமிழ் அரசியல் கைதிகள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் நன்றிகள். சிறையில் வாடும் அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை" - என்றார். (ஐ-02)

## யாழ். வருகிறார்...

பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரமசிங்க நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சர்வதேச ஆய்வு மாநாட்டு தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தினால் "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்...

சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்பட வேண்டும் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு எந்தவொரு குழப்பமும் எங்களுக்குள் இல்லை. கூட்டணியாக இருந்தாலும் கருத்து சுதந்திரம் உள்ளது. சிலவேளை ஊடகங்களால் எழுப்படும் கேள்விகளுக்கு, கேள்விகளை பொறுத்து பதில்களை வழங்கலாம். அதனை வைத்துக்கொண்டு குழப்பம் எனக் கூறிவிடமுடியாது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கொழும்புக்கு வெளியில் இருந்ததால் நாம் பங்கேற்கவில்லை. கொழும்பில் இருந்த மனோ கணேசன் நிகழ்வில் பங்கேற்றார். தீபாவளி என்பது தமிழர்களின் பண்டிகை. அதற்கு அழைப்பு விடுத்தால் செல்ல வேண்டியது தமிழர்களின் மரபாகும்.

தீபாவளி நிகழ்வுக்கு சென்றதால் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்துக்கு ஆதரவு என்ற முடிவுக்கு வரக்கூடாது. அத்தகையதொரு தீர்மானத்தை இன்னும் நாம் எடுக்கவில்லை.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையகம் எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர், இலங்கைக்கான இந்திய தூதுவர் உள்ளிட்டவர்கள் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்" - என்றார்.

## மருந்துகள்...

மையே காரணம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மருத்துவமனைகளில் அஸ்பிறின் மருந்துகளுக்குக்கூட பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன், பிரதேச வைத்தியசாலைகளில் சேலைன் போத்தல்களிலிருந்து பரசிற்றமோல் மருந்துகளுக்குக்கூட தட்டுப்பாடு நிலவுகிறது.

ஔடதங்கள் மற்றும் மருந்து வகைகள் தொடர்பில் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து குழு ஒன்றை நியமித்து, அதனூடாக கலந்துரையாடல்களை முன்னெடுத்து தேவையான தீர்மானங்களை எடுக்குமாறு எமது சங்கம் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும், அதனை சுகாதார அமைச்சு இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

இதன் காரணமாகவே நாட்டில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவக் காரணம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மருத்துவர் ஹரித்த அளுத்கே தெரிவித்துள்ளார். (ஐ)

# ஓட்டோக்களுக்கான கட்டணம் குறையாது



கொழும்பு, ஒக். 26

10 லீற்றர் பெற்றோல் வழங்கப்படுவதன் மூலம் பயணிகளுக்கு தம்மால் நிவாரணங்களை வழங்க முடியாது என்று முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக, முச்சக்கர வண்டி பயணிகளுக்கான முதல் கிலோமீற்றர் கட்டணத்தில் 20 ரூபாயை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்திருந்தது.

ஏற்கனவே முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த 5 லீற்றர் பெற்றோலை 10 லீற்றராக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நேற்று முன்தினம் தீர்மானித்ததை அடுத்தே இந்த தீர்மானத்தை முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் சங்கம் நேற்று காலை வெளியிட்டிருந்தது.

எனினும் நேற்று பகல் தமது முடிவை மாற்றிக்கொண்ட, அந்த சங்கம், முச்சக்கர வண்டிகளுக்கு 15 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டால் மாத்திரமே, பயணிகளுக்கு கட்டணக் குறைப்பை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளது.

## மூன்று...

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த எட்வேர்ட் சாம் சிவலிங்கம், தங்கவேல் சிவகுமார், சீலன் ஆனந்தராசா ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் கடந்த 2006 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் முடிவடைந்திருந்தது. இந்நிலையில், நேற்றைய தினம் மூவரையும் நிரபராதிகள் என்று கூறி மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது. (ஐ)

## பயிர்செய்ய...

தின் பின்பகுதியாகவுள்ள விளாத்திக்குளம் பகுதியில் 1980ஆம் ஆண்டு முதல் தோட்டப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலங்களும், நெல் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களும் போர் காரணமாக கைவிடப்பட்டு பராமரிப்பின்றி பற்றைகள், புதர்கள், மரங்கள் வளர்ந்தன.

இந்நிலையில், போர் முடிந்து மீள் குடியேறிய மக்கள் மெல்ல மெல்ல தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி வருகின்றனர். இந்நிலையில், அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப பயன்படுத்தப்படாத தமது நெல் மற்றும் மேட்டு நில பயிர் செய்கை நிலங்களை துப்புரவு செய்து நிலத்தை பண்படுத்தியுள்ளனர். இதற்காக அவர்கள் பெருமளவு பணத்தையும் செலவு செய்துள்ளனர்.

இந்நிலையில், அங்கு சென்ற வன வளத் திணைக்களத்தினர் குறித்த நிலங்களை மீள காடாக்குவதற்கான மரநடுகையில் ஈடுபட்டனர். இதன்போது, பரம்பரையாக மேட்டு நிலத்தில் பயிர் செய்த காணி ஒன்றில் மரங்கள் நடுகை செய்யப்பட்டதுடன், ஏனைய காணிகளிலும் மரங்களை நடுகை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வனவளத் திணைக்களத்தின் இந்த நடவடிக்கையால் தாம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பிரித்தானியா...

கடந்த 20ஆம் திகதி அறிவித்தார். இதையடுத்து, ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக அக்கட்சியின் பாராளுமன்றக் குழுவால் ரிஷி சுனக் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், லிஸ் ட்ரஸ் முறைப்படி தனது இராஜிநாமா கடிதத்தை, மன்னர் மூன்றாம் சார்ள்ஸை சந்தித்து நேற்று வழங்கினார். இதையடுத்து, மன்னரிடம் இருந்து வந்த அழைப்பை ஏற்று ரிஷி சுனக் பர்கிங்ஹாம் அரண்மனைக்கு சென்றார். இதன்போது, நாட்டின் அடுத்த பிரதமராக ரிஷி சுனக்கை மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் நியமித்தார்.

இதையடுத்து இங்கிலாந்தின் 57ஆவது பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பதவி ஏற்றுள்ளார். கடந்த 200 ஆண்டுகளில் இங்கிலாந்தின் மிக இளவயது பிரதமர் எனும் பெருமையும் 42 வயதாகும் ரிஷி சுனக்கிற்கு கிடைத்துள்ளது. (ஐ)

## திருத்தப்பட்டது...

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

22 ரூபாய் மற்றும் 15.50 ரூபாய் என்ற தற்போதைய இரு அடுக்கு கட்டண விகிதமானது, 20 வருடங்களுக்கான 500 கிலோவாட்ஸுக்கு சூரியகலத்துக்கு 37 ரூபாயாகவும் அதற்கு குறைவான சூரியகலத்துக்கு 34.50 ரூபாயாகவும் மாற்றியமைக்கப்படவுள்ளது.

விலை சூத்திரத்தின் அடிப்படையில் வருடாந்தம் கட்டணங்கள் மாற்றியமைக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குருந்தூர்....

ஆராய்ந்து, அவற்றுக்கு நியாயமான தீர்வை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி தலைமையில் உருவாக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் முதலாவது சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு விடயங்களை முன்வைத்தார். இவற்றில், தமிழ் மக்களின் வரலாற்று தொன்மை மிகுந்த பௌத்த ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் முல்லைத்தீவு - குருந்தூர்மலை, வவுனியா - வெடுக்குநாறி ஆலயங்கள் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கண்காணிப்பதற்காக அங்கு செல்லவுள்ளனர்.

முன்னதாக, திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் விதுர விக்கிரம நாயக்க சென்றமையும் அங்கு நிலவும் பிரச்னைகளுக்கு மாற்றுவழிகளை முன்வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் செலவினங்களை மட்டுப்படுத்தும் சட்டமூலத்தை உடனே நிறைவேற்றுங்கள்!

## பவ்ரல் அமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 26

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்பமாக எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கான சட்டமூல வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையில் வலுவானதொரு ஜனநாயக நிர்வாகமுறைமையைக் கட்டியெழுப்புவதற்குக் காணப்பட்ட மிகச்சிறந்த வாய்ப்பு தவறவிடப்பட்டிருப்பினும், 20 ஆவது திருத்தத்திற்கு சமாந்தரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு முன்நின்று செயற்பட்ட உங்களுக்கும், அதற்கு ஆதரவாக வாக்களித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

அதேவேளை, தேர்தல்முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திருத்தங்கள் தொடர்பில் உங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துகின்ற சட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துதல் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆராயப்பட்டுவருவதுடன் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடல்களுக்கு அமைவாக பல்வேறு வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் இறுதி வரைபு குறித்து இரு சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனவே தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் நீங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்பமாக மேற்படி வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (அ)



# அமெ. திறைசேரி அதிகாரி இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, ஒக். 26

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்க் இதனை தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர், அரச தலைவர்கள், பொருளாதார தலைவர்களுடன் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது மற்றும் நாட்டின் எதிர்கால பயணம் தொடர்பாக பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ரொபர்ட் கெப்ரோத் சில வாரங்களுக்கு முன்னரும் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். (அ)

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் பால்வினை நோய்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 26

நாட்டில் பல பாடசாலை, பல்கலைகழக மாணவர்கள் பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.

பால்வினை நோய்களால் பாதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் இயக்குநர் மருத்துவர் ரசஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

18 முதல் 30 வயதிற்குட்பட்டவர்கள் மத்தியில் நோய் தொற்று அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இளைஞர்கள் ஸ்பாவுக்கு செல்வது இதற்கு ஒரு காரணம் என தெரிவித்துள்ள அவர், ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை பல யுவதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (அ)

# பெறுமதியான வளங்களை விற்பதன்மூலம் நெருக்கடிகளை வெற்றி கொள்ள முடியாது!

## சுட்டிக்காட்டுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 26

பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கும் அவற்றினை வெற்றிக்கொள்வதற்கும் அன்று தொடக்கம் இன்று வரை ஆட்சியாளர்கள் நாட்டின் பெறுமதியான வளங்களை விற்பனை செய்வதே தீர்வாக கொண்டுள்ளனர். இருப்பினும் வளங்களை விற்பனை செய்தும் நாடு இன்று வங்குரோத்து நிலையையே அடைந்துள்ளது. இந்நிலையில் நாட்டின் பெறுமதியான வளங்களை விற்பனை செய்வதன் மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியாது. அவ்வாறானதொரு முறைமையை மாற்றி அமைக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில் -

டொலர் நெருக்கடி காரணமாக மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாமையால் சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது.

இருப்பினும் பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கு அன்று தொடக்கம் இன்று வரை ஆட்சியாளர்கள் நாட்டின் பெறுமதியான வளங்களை விற்பனை செய்வதே தீர்வாக கொண்டுள்ளனர்.

ரணில் இன்று ராஜபக்ஷவின் பாதுகாவலராகச் செயற்படுகிறார். கோட்டாபயவுக்கு வீடொன்று வழங்கி 34 இராணுவ வீரர்கள், 30 கடற்படை வீரர்கள், 6 விமானப்படை வீரர்கள் உள்ளடங்களாக 70 பேர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் நாட்டில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. - என்றார். (அ)

# முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படும்!

கொழும்பு, ஒக். 26

எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் எமது நாடு கடுமையான முட்டை தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் இதன் காரணமாக ஜனவரி மாதத்துக்கு பிறகு முட்டை விலை மேலும் உயரலாம் என்றும் இலங்கை கால்நடை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் சுசந்த மல்லவாராச்சி தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற இலங்கை கால்நடை மருத்துவ சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான அமர்வில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முட்டை பெறும் கோழிகளுக்கு தாய் விலங்குகள் இல்லாததே இந்த பிரச்சினைக்கு முக்கிய காரணம். வருடாந்தம் குறைந்தபட்சம் 80,000 தாய் விலங்குகள் தேவைப்பட்டாலும் இம்முறை கிட்டத்தட்ட பத்தாயிரம் தாய் விலங்குகளை மட்டுமே இறக்குமதி செய்ய முடிந்தது.அதற்கு முக்கிய காரணம் நமது நாடு தற்போது சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடியாகும்.

நிதிப் பிரச்னை காரணமாக கால்நடை துறைக்கு அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை கிடைக்கவில்லை. அதனால் தாய் விலங்குகளின் இறக்குமதி மிகவும் குறைந்துள்ளது. இது நிச்சயமாக எதிர்காலத்தில் ஒரு கடுமையான பிரச்சினையாக இருக்கும்.

இப்போது தேவையான தாய் விலங்குகளை கொண்டு வந்தாலும் அவை முட்டையிட்டு குஞ்சுகளை வளர்க்கும்போது எங்களுக்கு முட்டை கிடைக்க குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். இது குறித்து இதுவரை முறையான திட்டங்கள் அரசாங்கத்தினால் செயல்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் ஜனவரி மாதத்துக்குள் எமது நாடு கடுமையான முட்டை தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும். மேலும் இதன் காரணமாக ஜனவரி மாதத்துக்கு பிறகு முட்டை விலை உயரலாம் - என்றார். (அ)

# இலங்கை துறைமுக அதிகார சபைக்கு தலைவராக பேர்னாட்

கொழும்பு, ஒக். 26

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக கீத் டி. பேர்னாட் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.